# மூலநோய்களும் முறையான சிகிச்சைகளும்



612
மங்க
SL/PR

வைத்திய கலாநிதி
இ. மங்களாம்பிகை அம்மாள்

# மூலநோய்களும்

முறையான

# சிகிச்சைகளும்

*வைத்திய கலாநிதி*

**இ. மங்களாம்பிகை அம்மாள்**

மங்களபதி வெளியீடு

1994

Title : MOOLA NOYKALUM MURAIYANA SIKICHGHAIKALUM

Authur , DR. R. MANGALAMBIKAI AMMAL

Language : TAMIL

Edition ; FIRST EDITION — AUGUST 1994

Publishers : MANGALAPATHY AYURVEDIC CILINIC & PHARMACY
41 / 5, ARASA VEETHY, NALLUR, JAFFNA.

Printerc : MULLAI ACHCHAKAM,
ADIYAPATHAM ROAD, NALLUR, JAFFNA.

Cover : CHITHTHIRA CHELVAN A. GNANASEKARAM
GNANAM ARTS, CHANKANAI.

Portrait : S. JEGANATHA SARMA

Subject ; MEDICINE

Prize : Rs. 75 /

உ

ஆயுர்வேத மருந்தகம்
மங்களபதி

## ஸ்ரீ தன்வந்தரி பகவான்

நமஸ்கார ரூபமான மங்களம்

*புதுமை பெறுவையகத்தில் மூலிகைக்கு ஈஸ்வரனே*
*முதுமை பிணிமரண பயம் தீர்த்தருளும் பெருமானே*
*தேவா அசுரர்களும் தேடிய பரம்பொருளே*
*பாத மலர் பணிகின்றேன் தன்வந்தரி பகவானே.*

உ

## குரு வணக்கம்

வானுலகு புகழ்வேத வித்தகரே
எந்தையே உயர் இராசரத்தினமே
மனுவுலகு புகழ்வைத்திய கலாநிதியே
எம்மவரின் கல்விப் பெருநிதியே
தரும நெறி தவறாத மருத்துவமாம் சாஸ்திரத்தை
விதியாலே உவந்துரைத்த என்குருவே
விருப்புடனே படையலிட்டேன் நீர்வாழ்க
புவிமிசையில் உமதுபுகழ் வாழ்ந்திடவே.

## ஆயுள்வேத ஸ்தாபக, பரம்பரை வணக்கம்

உயிர்ஞானம் உரைக்கின்றது புகழாயுள் வேதமதே
உயர்வான சித்தர்களும் சித்திபெற்று வித்தை செய்தார்
ஈழத்திலவ் வேதவித்தை ஊன்றியவர் தெய்வங்களே
ஞாலத்தில் அவர்நமக்கு ஒளிசாலும் விளக்குகளே.

மங்களபதி.

யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபரும்,
ஆயுர்வேத ஆணையாளருமாகிய

## திரு. கா. மாணிக்கவாசகர் அவர்களின்

# ஆசி உரை

மக்களுக்கு யார் எச்சேவையைச் செய்யினும் ''மக்கள் சேவை மகேசன்சேவை'' எனக்கொண்டு வாழ்த்துவது மரபு ஆயினும் கால நேரம் தேவை அறிந்து சேவை செய்வதை மிக மிகப் பெரிய சேவை என்று கருதி வாழ்த்த வேண்டும் என்பது என் கருத்து. மருந்து வகைகளுக்கான தட்டுப்பாடு நிலவும் இன்றைய காலகட்டத்தில் மிகப்பெருந்தொகையினரை வருத்தும் மூலரோகம் பற்றி ஆராய்ந்து அறிந்து அந்நோயைப் பற்றியும், அதை வராது தடுக்கும் முறைகள் பற்றியும், வந்தபின் நோய்தீர்க்கும் முறைகள் பற்றியும், அதுவும் சுதேச வைத்திய முறையில் பொதுமக்களின் நன்மை கருதி புத்தகமாக 'மூலநோய்களும் முறையான சிகிச்சைகளும்'' என்ற பெயரில் வெளியிடவிருக்கும் வைத்திய கலாநிதி இ. மங்களாம்பிகை அம்மாள் அவர்களை மனதார வாழ்த்துகிறேன்.

எமது தவறான உணவுப் பழக்கங்களே எமக்கு நோய்களை உண்டாக்குகின்றன என்பதை நாம் யாவரும் அறிந்திருந்தும், தொடர்ந்தும் உடலுக்கு ஒவ்வாதவற்றை உண்டு, அநுபவித்து மென்மேலும் துன்பத்தை ஏற்படுத்துகிறோம். உடம்பை வளர்க்கும் உபாயத்தை அறிந்து எமது உயிரை அதில் சுகமாகத் தங்க வைக்க வழியைத் தேட வேண்டும். உடம்பை அழியவிட்டால் உயிர் அதை விட்டுப் பிரிந்து விடும்

இதையே திருமூலரும்;

" உடம்பார் அழியில் உயிரால் அழிவர்
திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்.
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே "

என்று கூறியிருக்கின்றார்

இந்த வழியில் உடம்பைப் பேணும் வழியையும், உயிரை வளர்க்கும் வழியையும் நமக்குத் தரும் இந்நூல் ''மூலநோய்களும் முறையான சிகிச்சைகளும்'' என்ற இந்தமங்களபதி வெளியீடு பக்களின் நன்மதிப்பைப் பெறும். என நம்புவதுடன் இதுபோன்ற வெயீடுகள் தொடர்ந்தும் வெளிவரவேண்டும். என வாழ்த்துகிறேன்.

09-08-94 கா. மாணிக்கவாசகர்

யாழ்/மாநகர சபை சுகாதார மருத்துவ அதிகாரியும்,
வட இலங்கை சுதேச மருத்துவ சபைத் தலைவருமான

# வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன்

M. B. B.S. M. Se (Com-med)

## அவர்களின்

# வாழ்த்துரை

சித்த ஆயுள்வேத வைத்திய கலாநிதி இ. மங்களாம்பிகை அம்மாள் எழுதி மூலநோய்களும் முறையான சிகிச்சைகளும் என்ற நூல் வெளிவர இருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். சித்த ஆயுள்வேத வைத்தியத் துறையின் பலன் மக்களுக்கு முழுமையாகக் கிடைப்பதற்கு இதுபோன்ற நூல்கள் உறுதுணையாக இருக்கும். தற்பொழுது உலகில் பரவிவரும் நோய்களில் ''வைரஸ்'' நோய்கள் முக்கியம் வாய்ந்தவை இவற்றை எமது உடலின் சுகாதார நிலையை மேம்படுத்துவதால் எதிர்கொண்டு இறுதியில் வெற்றிபெறலாம்.

எமது பாரம்பரிய மருத்துவத்துறை நமது உடல் நிலையை மேம்படுத்துவதிலும், இயற்கையுடன் இணைந்து சுகதேகிகளாக எம்மை வாழவைக்கின்றது. இந்தப் பணியை மேற்கொள்ளும் கலாநிதி மங்களாம்பிகைக்கு எமது நல்வாழ்த்துக்களையும் வழங்கி அவரின் பணி மேலும் சிறப்புற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

30-06-94 இ. தெய்வேந்திரன்

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின்
முன்னாள் அதிபர்,

# வைத்திய கலாநிதி ஏ. வி. இராசரத்தினம்

D. A. M, F. I. A. P.

## அவர்களின்

# மதிப்புரை

வைத்திய கலாநிதி இ. மங்களாம்பிகை அம்மாள் மூலரோகத்தைப் பற்றி எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையைப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இவர் பல வைத்திய சாஸ்த்திர நூல்களையும் ஆராய்ந்து, அவற்றை உசாவுத்துணை நூல்களாகக் கொண்டு இக் கட்டுரையை மிகவும் ஆராய்ச்சியுடன் எழுதியிருக்கிறாரெனப் புலனாகின்றது. அத்துடன் தான் கற்ற வைத்தியசாஸ்திர அறிவையும் தனது கையாட்சி முறையான அனுபவங்களையும் இதில் காட்டியுள்ளார். ஓர் வைத்தியன் நோயை நிதானிக்கும்போது பஞ்சலட்சண நிதான அறிவு மிகவும் அத்தியாவசியமானது. ஆகவே இவ்விஷயம் இங்கு மிக நுட்பமாய் ஆராயப்பட்டுள்ளது. மூலரோகம் உண்டாகும் காரணங்களையும், உண்டான பின் ஏற்படும் குறி, குணங்களையும், அதன் தடுப்பு முறைகளையும் சிகிச்சை முறைகளையும் மிகவும் விரிவாக விளக்கம் கொடுத்துள்ளார். வைத்தியம் கற்காத பாமர மக்களும் இதை வாசித்து இம்முறைகளைக் கையாண்டு பயன்பெறுவார்கள் என்பது எனது அபிப்பிராயம். இந்நோயினால் பீடிக்கப்பட்டு வருந்துபவர்கள் பலரை நான் கண்டதுண்டு. வடமொழியில் இந்நோயைப் பற்றி "அரிவத் ரீயதே அர்ச்சகா" எனச் சொல்லப்பட்டுள்ளது. அதாவது, ஒருவனை அவன் சத்துராதி எப்படித் துன்பப்படுத்துவானோ அவ்வாறே அர்சஸ் என்னும் மூலநோயானது அவ்ரோகியைத் துன்பப்படுத்தும் என்பதாம். சந்ததியில் தோன்றிய பிறவி மூலமானது சிகிச்சைக்கு வசப்படாது எனக் கூறப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இதில் கூறப்பட்டுள்ள தடுப்பு முறைகளையும், பத்திய பாகங்களையும், ஔடதப்பிரயோகங்களையும் கையாண்டு வந்தால், நற்பயன் உண்டாகும். இவ்வாராய்ச்சிக் கட்டுரை நூல் பெரும்பாலும் வைத்தியர்களுக்கும், வைத்தியமகற்கும் மாணவர்களுக்கும் பாமர மக்களுக்கும் பயன்படும் எனக் கருதுகிறேன்.

"கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு என்றுற்ற கலைமடந்தை ஓதுகின்றாள்" என்ற கொள்கையைச் சிரமேற்கொண்டு ஆராய்ச்சிக கட்டுரை எழுதிய அம்மையார், தாம் உயர்தரக்கல்வி கற்று, வைத்திய சாஸ்திரத்தில் மேம்பாடு அடைய வேண்டுமென்னும் பேரவாக் கொண்டிருக்கிறார். அவரது நன்நோக்கம் நிறைவேற ஆண்டவன் அருள்புரிவாராக.

27-06-94 அ. வி. இராசரத்தினம்

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் அதிபர்

## வைத்திய கலாநிதி நா. வாமதேவன்

B. Sc. (Hons) D. A. M. S. (CEY) D. I. H (INDA)

அவர்களின்

# அணிந்துரை

"நோய்நாடி நோய் முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" (திருக்குறள் 948)

நொய்வு, நீரழிவு, இருதய வியாதிகள் போன்ற சமுதாயத்தை அலைக்கழிக்கும் நோய்களைப்பற்றி பொதுமக்களின் அறிதல் ஆர்வத்தைத் திருப்திப்படுத்தும் கைநூல்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் வந்துகொண்டிருக்கின்றன. அவை நிபுணர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் எழுதப்பட்டால் சதாரண மக்களுக்கு பெரிதும் பயன்படா. பின்னையோரை மனதில் கொண்டு எழுதப் பட்டால் முன்னையோர் குறைசொல்வார்.

எமது கல்லூரி மாணவி இ. மங்களாம்பிகை அம்மாள் அரிதில் முயன்று எழுதிய மூலநோய்களும் முறையான சிகிச்சைகளும் என்ற இந்நூல் இருபகுதியார்க்கும் இயன்றளவு திருப்தியைக் கொடுக்கும்.

உடற்தொழிலியல் அடிப்படையில் மட்டும் நோயின் காரணத்தை ஆராயும் போக்கு மேற்புல விஞ்ஞானக்கல்வியால் விளைந்தது. உடலை வருத்தும் காரணிகளுடன், உளத்தொடர்பானவையும் இணைந்து செயற்படும் மாற்றத்தைப் பொருத்திப் பார்க்கும் ஆரம்பநிலை இப்போது மேலை 'விஞ்ஞானிகளால் சிந்திக் கப்படுகிறது. எனினும், நம் நவீனக் கல்வியாளரிடையே அது உரிய இடத்தைப்பெறவில்லை. ஆசிரியை யூகமுனிவரின் பாடலைச் சான்றுகாட்டி அறக்கோட்பாடுகளுக்கமைய நடத்தையை வகுத் துக்கொள்ளாதவர்களுக்கு ஏற்படும் உடற்பிணிபற்றி எழுதுவது இன்று யாவராலும் சிந்திக்கப்படவேண்டியதொன்றாகும். நோய்க் காளாகியவர்கள் தாம் மூலகாரணத்தைக் களையாது மருத்துவனே அனைத்தையும் செய்துவிட வேண்டுமென்று நினைக்கும் பொது சனப் போக்கு மாறவேண்டும். மருந்து என்னும் அதிகாரத்தின் ஆரம்ப விளக்கத்தில் பரிமேலழகர் கூறும் காரணங்களாவன: உணவு செயல்களது ஒவ்வாமை என்பது எல்லோர் மனதிலும் நிறுத்தவேண்டியதாகும். மருத்துவர்களாகிய நாம் அதைப் போதியளவு மக்கள் உள்ளத்தில் பதியவைக்கவேண்டும்.

மேற்கு உலகில் மருத்துவத் தொழில்புரியும் நம்மவர், பொதுக் கல்வியும் மருத்துவ அறிவும் மிகுந்த அங்குள்ள மக்கள், உடற் பிணிகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் உள்ளத்துக்கும் உள்ள தொடர்பை அறிந்து குறைந்த மருந்தும், கூடிய நடைமுறை மாற்றமும், உள்மனஅமைதியை நாடும் வழிகளையும் மருத்துவர்களிடம் பெறமுன்வருகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றனர். இது நமது நாட்டின் தொன்மையான போக்கு என்பதை சுதேசமருத்துவர் கள் மக்களுக்கு நினைவூட்டும் நன்னெறியைக் கடைப்பிடிக்க இந் நூல் வழிசெய்கின்றது. திருமூலர் திருமந்திரம் போன்ற பொதுமக் கள் அறிந்தநூல்களையும் எடுத்துக்காட்டியிருப்பது நல்லபோக்கு. பொதுமக்கள் நாகரிக உணவு, பழக்க வழக்கங்களை விடுத்து உள்ளூரில் கிடைக்கும் கீரை வகை, பழரசம், மோர் போன்றவற்றை உணவில் சேர்ப்பதுபோன்ற ஆலோசனைகள் பொன்போல் போற்றத் தக்கவை.

மருத்துவ மாணவர்களுக்கும் உபயோகமான கலைச்சொற் களைப் பிரயோகித்து விளக்கங்கள் கொடுப்பதால் அத்துறையின ருக்கும் ஒரு நல்ல கைநூலாக பயன்படும் என்பது எனது நம்பிக்கை. நூலாசிரியை தொடர்ந்து இத்துறையில் மேலும் கற்றோரும், மற் றோரும் சுவைக்கும் நூல்களை ஆக்கித் தரவேண்டும். அவரது பணி மேலும் தொட இறையருள் வேண்டுகின்றேன்.

29.06.94 நா. வாமதேவன்

உ

ஸ்ரீ தன்வந்தரி பகவான் துணை

# முகவுரை

''பரம்பரையாக எமக்கு மூலநோய் வருகிறது, எனக் கூறுபவர்களையும் இடையிட்டு வந்தது, சத்திர சிகிச்சை செய்து கொண்டேன் ஆனாலும் மீண்டும் வந்து விட்டதே'' எனக் கூறிக் கொண்டு, துன்பத்துடன் அமைதியிழந்து வரும் பலரை எனது 20 வருட கால அனுபவத்தில் கண்டுள்ளேன். இவ்வாறு கூறிக்கொள்பவர்களில் பாரம்பரையில் நோயிருந்ததை அறிந்திருந்தும் தனக்கு வராது தடுப்பதற்கு என்ன செய்யலாமெனச் சிந்தித்ததில்லை அதுபோல், சத்திரசிகிச்சை செய்துகொண்டவர்களும் தமக்கு ஏன் இந்நோய் ஏற்பட்டதென்ற காரணத்தை அறிந்து சத்திர சிகிச்சையின் பின்பு அவற்றை விலக்கிக்கொள்ள முயலவில்லை. ஆதலால், இவ்வாறானவர்கள் தமக்கும், தமது சந்ததிக்கும் மீண்டும் நோய்க்காளாகும் நிலைகளை உருவாக்கிக் கொள்கிறார்கள் என்றே கூறலாம்.

சுதேச வைத்திய முறைகளில் ஒரு நோய் மீண்டும் வராமற் செய்வது சிகிச்சையினால் மாத்திரமல்ல. நோய்க்காரணிகளை நீக்கியும், சில ஆரோக்கியமான நடைமுறைகளைக் கைக்கொள்வதாலேதான் நோய் மீண்டும் வராமல் தடுக்கமுடியுமெனக் கூறலாம்

மூலநோயானது பல்வேறு நோய்களுக்செல்லாம் மூலகாரணமாகின்றது. அவ்வாறான அடிப்படையில் மூலநோய் பற்றியும் அது ஏற்படும் காரணம், அதன் வகைகள், அந்நோய் வராமல் தடுக்கும் வழிகள், உணவுத்திட்டங்கள், நடைமுறை ஆரோக்கியப் பழக்க வழக்கங்கள், இலகுவான சிகிச்சை முறைகள், வைத்தியரின் சிகிச்சைக்கான தேர்ந்த மருந்துகள், நவீனமயப்படுத்திய எமது மருந்துகள் எனப் பலவிதமான விளக்கங்களையும் இந்நூல் விவரிக்கின்றது.

சுதேச வைத்திய மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் நோயின் வகைகள், நோய் ஏற்படும் விதம் (Pathology) ஆரம்ப நிலை, நோய் நிலை, நோயின் சாத்திய, அசாத்திய நிலைகளும், சிகிச்சைக் கிரமங்கள் போன்றன விபரமாக பரிபாஷைகளுடனும் விளக்கங்களுடனும் எழுதப்பட்டுள்ளது

பலவிதமான மருத்துவ நூல்களில் அனேக மூலரோக சிகிச்சை முறைகள் விவரிக்கப்பட்டிருப்பினும், என் அறிவு, ஆற்றல், அனுபவங்களுக்கேற்ப முடிந்த வரையில் தேர்ந்த மருந்துகளையும், என் அனுபவ விளக்கங்களையும் விவரித்துள்ளேன்.

ஆதி, ஆரம்பம், தலைமை, வேர், கிழங்கு, சொந்தம் உரையில்லாத ஒரு பாடம், 'ஒரு நட்சத்திரம், தாலம்பப் பாஷாணம், பாதம், ஒரு நோய், ஆறுவகை ஆதாரங்களில் முதலாவது எனப் பொருள் கூறும் மூலம் என்னும் இச்சொல்லானது மனித உடலுக்குக் கீழ் வாய் ஆகிறது.

மனித உடலின் ஆறு சக்கரங்கள் அல்லது ஆறு ஆதாரங்கள் எனப்படும் முதலாவது ஆதாரம் மூலாதாரம். இங்கே, குண்டலனி என்னும் உயிர்ச்சக்தி அமைதியாய், சுருண்ட பாம்புபோல் உறங்கிக்கிடப்பதாயும், தியானத்தின் மூலம் மனதை உள்முகமாய் ஒருமைப்படுத்திக் குண்டலனிசக்தியை முதுகு முள்ளந்தண்டின் வழியே சிரசிற்கு எழுப்பப் பயிற்சிபெற்றவன் பெரும் சாதனா நிலையை எய்துகிறான் என்று யோகநூல்கள் கூறுகின்றன.

மூலாதார சக்தியைக் காத்து விழித்துக் கொள்ளச் செய்தவன் புலன்களை வென்றவன் ஆகிறான் ஆரோக்கியமும், அமைதியும் நிறைந்தவனாகி உலகைத் தன்னுள் வசப்படுத்திக் கொள்கிறான். முக்காலமும் உணர்ந்த முனிவர்களின் சாதனைகளுக்கும் மூலாதார சக்தியே அடிப்படையாயிற்று சிந்திக்கும்

சிறப்பைப் பெற்ற மானுடன் தன் உயிர்ச் சக்தியைக் காக்க ஆரோக்கியத்தைப் பேணுவதும், தம் குண இயல்புகளை மேம்படுத்த அமைதியைக் காப்பதும் அவசியமாகிறது. அந்த வகையில் மானிடர் உயர்விற்கும் ஆரோக்கியத்துக்கும் மருத்துவம் பெரும் பங்கு வகிப்பதனால் எனது முதல் நூலாக இந் நோயை எடுத்துக் கொண்டதற்காக பெருமகிழ்வெய்துகிறேன்.

மனிதன் அறியவேண்டிய குறையின்றி வாழவேண்டிய நிலைமையைத் தெரிந்து கொள்ளவும் மூலாதார முக்கியத்துவம் பெற்ற மருத்துவ அடிப்படைகள், அம்சங்கள் அதன்விளைவுகள் என்பவற்றை எல்லோரும் அறிந்துகொள்ளவேண்டுமென்பது எனது அபிலாஷையாகும்.

இ. மங்களாம்பிகை அம்மாள்
(மங்களபதி)

மங்களபதி ஆயுள்வேத
வைத்தியசாலையும், மருந்தகமும்.
41/5, அரச வீதி, நல்லூர்.
யாழ்ப்பாணம் இலங்கை.

# மூலநோய்

பெருங்குடலின் நாலரை அங்குல நீளமுள்ள இறுதிப் பாகமானது மூலம் அல்லது குதம் எனப்படும். இதில் மூன்றில் ஒரு பகுதி இடத்துள், சங்குச் சுழிபோன்ற வடிவத்தில் அமைந்துள்ள மூன்று மடிப்புக்குள் முதலாவது: பிரவாஹினி என்னும் ஒரு அங்குல அளவுள்ள மடிப்பு, சுருங்கி நீளும் தன்மையதாய் மலத்தை வெளித்தள்ளும் செயலையும்; விஸர்ஜனி எனும் $1\frac{1}{2}$ அங்குல இரண்டாவது மடிப்பு மலத்தை உந்தி வெளித்தள்ளும் செயலையும்; சம்வரணி எனும் $1\frac{1}{2}$ அங்குல அளவுள்ள மூன்றாவது மடிப்பு மலம் வெளியேறியதும் குதத்தை இறுக மூடிக்கொள்ளும் செயலையும் மேற்கொள்ளுகின்றன.

மேலும், $\frac{1}{2}$ அங்குல அளவுள்ள குதத்தின் வெளி உதடுகளாக குதௌஷ்டம் அமைந்துள்ளது. குதப் பகுதியானது, நரம்புகளாலும் இரத்தக் குழாய்களாலும் நிரப்பப்பட்டு, சீதச் சவ்வினால் மூடப்பட்ட

தொரு மாமிசப் பகுதியாகும். இம்மூன்று மடிப்புக்களிலும் ஏற்படும் மேலதிக மாமிச வளர்ச்சியே மூல முளை, எருவாய் முளை, அர்ச்சஸ் என்றும் குறிப்பிடப்படுகிறது. இப்பகுதி வெளித்தள்ளப்பட்டு கீழிறங்குவதால், குத நெகிழ்ச்சி எனப்படுகின்றது.

## நோயின் காரணம்:

*பரம்பரையாகவும், இளமை முதல் அடிக்கடி மலச்சிக்கல் ஏற்படுவதாலும், மலம், சலம் அபான வாயுவை அடக்குவதாலும், எண்ணெய் முழுக்குச் செய்யாமல் விடுவதாலும், குறைந்த அளவு உணவை உண்பதாலும், பசி இருந்தாலும். அடிக்கடி அளவுக்கதிகமாய் உண்பதாலும், போதிய அளவு நீர் அருந்தாமையாலும், அளவுக்கு மீறிய காரம், புளி, மதுசாரம், வற்றல்கள், பொரியல் வகை, கோழி இறைச்சி, வாத்து இறைச்சி, இவற்றை உண்பதாலும், வலிந்து மலத்தை வெளியேற்ற (முக்கி)முயற்சிப்பதாலும், மலச் சிக்கலை நீக்க வேண்டி கடுமையான பேதி மருந்துகளையும், காரமான வஸ்தி (ENEMA) முறையை அடிக்கடி பயன்படுத்துவதாலும் தவறான வஸ்திப் பிரயோகத்தினாலும் குதத்தில் உராய்வு ஏற்படுவதாலும், உயர்ந்ததும், கரடு முரடான இருக்கைகளில் இருப்பதாலும், மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டி, வாகனங்களில் நெடுந்தூரப் பயணம் செய்வதாலும், நெடு நேரம் ஒரே இடத்தில் இருப்பதாலும், நெருப்பிற்கு அண்மையில் இருப்பதாலும், தொடர்ந்து நித்திரை கொள்ளாதிருப்பதாலும், கடின உடலுழைப்பாலும், உணவு உண்டதும் ஜீரணமாக முன் அதிக பாரம் தூக்குவதாலும், ஜீரணமாக முன்பும் மலச்சிக்கல் இருக்கும்போதும் உடலுறவு கொள்வதாலும், அதிகரித்த உடல் உறவினாலும், நீர் நிலைகளிலோ, கடலிலோ ஆசனம் இடுப்பு வரை நீரில் ஆழும்படி நெடுநேரம் சஞ்சரிப்பதாலும், பெண்களுக்கு காலம் கடந்த பிரசவத்தினாலும், பிரசவத்தின் பின்பு கடும் கோப்பி, சாராயம், கோழி இறைச்சி, கார சூப் வகைகளை உபயோகிப்பதாலும், கடும் சூடான வேப்பம் பட்டைக் கசாயத்தை இடுப்பில் ஊற்றிக்கொள்வதாலும், போதிய அளவு நீர் அருந்துவ*





*தைத் தவிர்ப்பதாலும், பிறப்புறுப்பு வேதனையின் பயத்தினால் மலத்தை அடக்கிக் கொள்வதாலும், பெண்களுக்கும் இந்நோய் ஏற்படக் காரணமாகின்றது.*

## யூக முனிவர் பாடல்:

*முனையாக முத்தோரை வைதலாலும்*
*மோசங்கள் பண்ணியே கற்பழித்தும்*
*நினையாக நினைவிலொன்று வாக்கிலொன்றும்*
*நேர்ந்தபடி சொல்லுகின்ற நிட்டூரக்கும்*
*பனையாகப் பரதேசி பந்துவானோர்*
*பசித்திருக்க உண்டதோர் பாதகர்க்கும்*
*தனையாகச் சமாதானம் தவிர்க்கின்றோர்க்கும்*
*சண்டாள மூலம்வந்து சனிக்கும்தானே.*

*என அதர்ம வழி நின்றோரை. கொடிய மூலரோகமானது பற்றி வாதை செய்து வருத்துமென யூக முனிவர் கூறுகின்றார்.*

## மூலநோய் ஏற்படும் விதம்:
## (ஸம்ராப்தி - PATHOLOGY)

*கோளாறான உணவுக் கிட்டத்தினாலும், மலச்சிக்கலாலும், உடல் பராமரிப்புச் சீர்கேட்டினாலும், சமநிலையில் உள்ள வாத பித்த, கபம் என்னும் முக்கோஷங்களும் கோளாறடைந்து நாபிக்கும், மூலத்திற்குமிடையே அமைதியாகச் சஞ்சரிக்கும் அபான வாயுவை கோளாறடையச் செய்து, மலத்தின் துர்நீரை மீண்டும் தேகத்தில் வாங்கி, சுவறிக்கொண்டு உஷ்ணம் அடைந்து விரிவடையும் அபான வாயு பெருங்குடல், சிறுகுடல் பகுதியெங்கும் தாறுமாறாகச் சஞ்சரித்து, பிராணன், சமானன், உதானன், வியானன் என்னும் நான்கு வாயுக்களையும், (பஞ்ச வாயுக்கள்), ஆலோசகம், ரஞ்சகம், சாதகம், பாசகம், பிராஜகம் என்னும் பஞ்சபித்தங்களையும் அவலம்*

பகம், கிலேதகம், போதகம், தர்ப்பகம், சிலேஷ்மகம் என்னும் பஞ்ச கபங்களையும் கோளாறடையச் செய்து, தீபனம் (பசியெடுத்தல்) பாசனம் (ஜீரணித்துக்கொள்ளல்), என்னும் சக்திகளைக் கெடுத்து, மலத்தின் தன்மையையும் கேடடையச் செய்து, அவ்வாறானமலம் தேங்கியகுதப் பகுதிகளின் மடிப்புக்களின் மாமிசம், நரம்பு, நாடி நாள, கொழுப்புப் பகுதிகளைப் பற்றியதாய், தோஷங்களின் வன்மைக் கேற்ப தோற்றத்திலும், இடத்திலும், தன்மையிலும், வேதனையிலும் வித்தியாசமான நிலையிலும் ரோகமாகப் பரிணமிக்கின்றது.

காயத்தில் மூலங்கண்ட விதம்கேளு
பாயொத்த தீபனம் பரிந்தே அடக்கினும்
மாயை மயக்க மலத்தை அடக்கினும்
ஒயுற்ற குண்டலினிக்கு உட்புகும் வாய்வே.

மூலாதார பீடத்தில் அமைதியாய் உறையும் குண்டலினி உயிர் சக்தியானது, கோளாறடைந்து வன்மை இழப்பதால் மனிதன் அமைதியிழந்து, வலிமை குன்றி ரஜோ குணமுடன் சினம் மிக்கவனாகி விடுகிறான் என்ற கருத்தை திருமூலரும் மந்திரமாய் உரைக்கின்றார்.

## மூலநோயின் வகைகள் :

மூலரோகம் இருபத்தியொரு வகையென வகைப்படுத்திய சித்தர்கள் முடிவில் இரு பெரும் பிரிவாக, தாய் தந்தை வழியாக பிறப்பிலே வருவது ''சகசமூல ரோகம்'' என்றும், கொடிய உஷ்ணத்தின் விளைவால் இயல்பாக உடம்பில் உண்டாவது ''உத்தரச மூலரோகம்'' என்றும், யூக முனி வைத்திய சிந்தாமணியில் விவரிக்கப்பட்டுள்ளது.

நீர் மூலம், செண்டுமூலம், முளைமூலம், சிற்று மூலம், வரண மூலம், ரத்த மூலம், சீழ் மூலம், ஆழி மூலம், தமரக மூலம், வாதமூலம், பித்தமூலம் சிலேட்டும மூலம், தொந்தமூலம், வினை மூலம், மேக





மூலம், பௌத்திர மூலம், கிரந்தி மூலம், குத மூலம், புற மூலம், கருக்கு மூலம், சவ்வு மூலம் என இருபத்தி ஒரு வகையாக மூலரோகங்கள் கூறப்படுகின்றன.

ஆயுள்வேத மருத்துவத்தில் தனித்தனி தோஷங்களால் மூன்றும் முக்தோஷங்களும் சேர்ந்து சன்னி பாதத்தினால் ஒன்றும், ரத்தத்தினால் ஒன்றும் ''ஸஹ ஜார்ஜஸ்'' என பிறப்பிலேற்படுவதால் ஒன்றும் ஆக மூலரோகம் என்னும் அர்ச்சஸ் ஆறு வகைப்படும் என்று சரகசம்ஹிதை கூறுகின்றது.

## வாத மூலரோகம்

முக்தோஷங்களும் கோளாறடைகையில் வாதம் மிகுந்ததாய், அபான வாயுவை அடக்கி, மாமிசத்துடன் கூடி, நரம்பைப் பற்றி குதத்தின் துவாரத்தைச் சுருங்கச் செய்யத் தொடங்கி, மலம் வெளியேற முடியாமலும், பிழுக்கை போல் உதிரும். வயிறு பொருமி, ஆண்குறியிலும், விதையிலும் சிறுநீர்ப்பையிலும், தொடை இடுக்கிலும் மிகுந்த வேதனை ஏற்படும் அபானம் சிறுநீர், மலம் தடைப்படும் வாயில் சுவையின்மை, மேல் ஏப்பம், குரல் மாறுதல், கண்களில் அரிப்பு, மூக்கு கன்னத்தில் வலியும், சரும வரட்சியும், தேக பலம் குன்றியும் காணும்.

மூலத்தில் தோன்றும் முளைகள் மிக வரட்சியாகவும், நுனி சுருங்கிக் கடினமாகவும் கருமை நிறம் கொண்டும் கூர்மையான முள்ளைப் போன்றும், கோணலாயும், பிளப்புக்கள் உள்ள பல முனையுடையதாகவும் தாறுமாறாகப் பரவியும் காணப்படும். இதில் வெளியேறும் இரத்தம் கருமையாய், மிக அற்பமாய் வெளியேறும்.

எண்ணெய்ப் பசையும், இளஞ்சூடும் உள்ள ஒத்தடங்களால் உடன் தணிவடையும்.

## பித்த, இரத்த மூலரோகம் :

கோளாறடைந்த அபான வாயுவானது, பித்தத்தையும், இரத்தத்தையும் பற்றி, மாமிசத்துடன் சேர்ந்து கொதிப்படைகின்றது. இதனால், மலமும் சிறுநீரும் குறைவாகவும், பசிய மஞ்சள் நிறமாகவும், மீன்நாற்றத்துடனும் வெளியாகும். நாவறட்சி, தேகம் கொதிப்படைதல், கண் பஞ்சடைதல், உணவில் வெறுப்பு, கண், நகம், தோல் வெளிறியும், மஞ்சணித்தும், அதிக வியர்வையும், பிசுபிசுப்பும், மீன் வாடையும் வீசும். மயக்கமும் சோர்வும் ஏற்படும்.

இதில் தோன்றும் மூல முளைகள் மென்மையுடன் தளர்ந்ததாய், தொடுதலைப் பொறுக்க மாட்டாத வேதனையும், சிவப்பு, மஞ்சள் என நிற பேதமுள்ள முளைகளாயும் பசிய மஞ்சள் நிறம் கலந்த நீர் நூலைப்போல் ஒழுகிக் காணும்.

இர்த்தம் மிகுந்ததானால் இரத்தம் சீறிப் பாயும் தன்மையும், மூலத்தில் எரிவும், குத்து, வலி, வேதனையும் தாங்க முடியாது ரோகி மயக்கம் அடைவான். இரத்தம் வெளியானபின் முளைகள் புண்ணாக்கிக் காணப்படும்.

குளிர்ந்த ஒத்தடங்களும், பூச்சுக்களும் வேதனையை உடன் தணிக்கும்.

## கப மூலரோகம்

கோளாறடைந்த தோஷங்களில் கபம் மிகுதியாய் கொழுப்பையும், மாமிசத்தையும் கெடுத்து உபத்திரவத்தையும், முளைகளையும் உண்டு பண்ணுகிறது. மலம் சிறுநீர் கனதியாகி, மலம் கழியமுடியாது வலிமையுடன் முக்கவேண்டிய செயல்பாட்டைத் தூண்டும். தொடை இடுக்கினுள் வீக்கமும் கத்தரிப்பது போன்ற வேதனையும் காணும். குமட்டல், சுவையின்மை, வீக்கம், சோகை, உடல் ஜுரம் போல் நடுங்குதல், சிறுநீர் தாரையில் கல், அல்லது சிறுநீர்ப்பையில் மணல் போன்ற தன்மையும் ஏற்பட்டு சிறுநீருடன் வெளி





யேறும். உடல் கனதி, வாய் இனிப்பும், நீரிழிவும் காணும். கண், நகம், முகம், உடல் வெளுத்திருக்கும். எண்ணெய்ப் பசையும் வெண் நிறத்துடன் கூடிய தடித்த முளைகள் விறைப்புடனும் உணர்ச்சியற்று கடினமானதாகவும், வீக்கமும் அரிப்பும் காணப்படும். பசிய நிறத்தில் அல்லது மாமிச நிணம் போன்று பாணியாக ஆசனத்தால் சுரந்துகொண்டிருக்கும்.

வரட்சியும், இளஞ்சூடுமுள்ள ஒத்தடத்தால் வேதனையும், விறைப்புத் தன்மையும் நீங்கும்.

## சன்னிபாத மூலரோகம்

இதில் இரண்டிரண்டு தோஷங்களோ, அல்லது மூன்று தோஷமுமோ கோளாறடைந்து குதத்தில் முழுப் பாகத்திலும் பரவியதால், சத்திர சிகிச்சைக்கும் பலனளியாது மறுதலிப்பதால், கொடிய மரண வேதனையை நோயாளி அனுபவிப்பான். நோய் தீவிரமடையும் நேரமெல்லாம், சிகிச்சை பெற்று வரவேண்டியதாய், குணப்படுத்துவது அசாத்தியமெனினும், ''யாப்பியம்'' என்னும் சீக்கிரம் பிராண அபாயம் ஏற்படாது வெகு காலம் சீவிக்கக் கூடியவனாக சிகிச்சையளிக்க முடியும்.

## பிறவி மூலரோகம்

இளம் பராயத்திலேயே அற்ப உணவு உண்பவனாய், தேகம் இளைத்தவனாயும் மலக் குடல் சிறுத்து திரியாக மலம் வெளியாவதாயும், முற்கோபியாயும், இரத்த நாளங்கள் தெரியும் தோற்றம் உடையவனாயும், குரல் கம்மியவனாயும் பசிமந்தமும், கழுத்துக்கு மேல் சிரசு, கண், காது, மூக்கில் அடிக்கடி ரோகங்கள் ஏற்படுபவனாயும் குடல் இரைச்சல், பொருமல், அருவருப்பு உணர்வு கொண்டவனாயும், பாலியல் உணர்வு குன்றியவனாயும் அற்ப சந்ததிப் பேறோ அல்லது சந்ததி அற்றவனாயும், சடுதியில் நோய் தீவிரமடையும் தன்மையாய், முளைகள் குதத்தில் உட்புறம் நோக்கி நிமிர்ந்

தலையாயும் சிவந்து பழுத்த நிறமுடையனவாய் மிகக் குரூரமான வேதனை கொடுப்பதால், நோயாளி மிகக் கொடிய துன்பத்தை அடைவான்.

## மூலரோகத்தில் குணமாக்க மிக இலகுவான நிலைகள் (சாத்தியம்)

குதத்தின் இறுதி மடிப்புக்களில் உண்டாவதும், தனித்தோஷங்களின் தாக்கத்தால் ஏற்படுவதும், நோயின் ஆரம்ப காலத்திலும், மருத்துவன், ஆலோசனைக்குக் கட்டுப்பட்டுத் தன் ஆரோக்கியத்தில் கவனமுடையவனுக்கும் இலகுவாக சிகிச்சை அளிக்கமுடியும்.

## கஷ்டப்பட்டு சிகிச்சையளிக்க வேண்டிய நிலைகள் (கஷ்ட சாத்தியம்)

குதத்தின் இரண்டாவது மடிப்பைப் பற்றிய வியாதியிலும் இரண்டு தோஷங்கள் கோளாறடைந்திருப்பினும், உடல் ஆரோக்கியம் மிகக் குன்றியவனுக்கும், கஷ்டப்பட்டு, சிகிச்சையளித்துக் குணமாக்க வேண்டியதாகும்.

## முற்றாகக் குணப்படுத்த முடியாத நிலைகள் (அசாத்தியம்)

குதத்தின் உள் மடிப்பிலோ, அல்லது குத பாகம் முழுவதுமோ தாபிதம் அடைந்தும், திரி தோஷங்களாலும் கோளாறடையப்பட்டதும், சத்திர சிகிச்சையின் பின்பு மறுதலிக்கப்பட்டதும், சரியான சிகிச்சை பெறாது நோயை உதாசீனம் செய்த நிலையிலும், பிறவி மூலம் உள்ளவனுக்கும் தன் உடல் நலத்தில் நாட்டமில்லாது உதாசீனம் செய்பவனுக்கும் சிகிச்சையளித்துக் குணப்படுத்த முடியாது.

நோய் தீவிரமடையும் நேரமெல்லாம் சிகிச்சை பெற்று ஆயுளைப் பரிகரிக்க வேண்டியதேயாகும்.





## மூலநோய் தோன்றக் கூடிய அறிகுறிகள் (பூர்வ ரூபம்)

அடிக்கடி மலச்சிக்கல் ஏற்படல். வயிற்றில் வேதனையுடன் சொற்ப மலம் கழித்தல். மேலும் மலம் கழிய வேண்டும் என்ற உணர்வு உறுத்துதல். வயிற்றில் பொருமல். உணவில் வெறுப்பு. தலை வலி, வாயும், வியர்வையும் நாற்றம் வீசுதல். நாளாக ஆக பசி மிகக் குறைதல், மலம் கழித்ததும் தலைவலி நீங்குதல். அபான வாயு வெளியேறாது அடங்கிப் போவது போல இருத்தல். குடல் இரைச்சலுடன் வயிறு பொருமி, மேல் ஏப்பமாகி வெளியேறுதல். தொடை இடுக்கில் வேதனை. மலம் திரிந்து, அல்லது பிழுக்கை போல் உதிருதல். ஆசன வாயில் அதைப்பு, எரிச்சல் அல்லது திடீரென மூலத்தில் கடுப்பு ஏற்படுதல். மன அமைதியின்மை. மலம் போகையில் மலத்துடன் குருதி வெளியேறுதல். ஆசன வாயில் எரிவும், உடல் சோர்வும் சினமும் ஏற்படத் தொடங்குவதை அறிந்து மூலநோய் ஆரம்ப அல்லது ஆரம்பித்துவிட்டதற்கான குறிகுணங்களாகக் கொள்ளவேண்டும்.

## மூல நோய் வராமல் தடுப்பது

முற்குறிப்பிட்ட நோய்க் காரணங்களை அறிந்து விலக்குவதுடன் தினமும் அதிகாலையில் எழுந்திருத்தல், சுட்டு ஆறிய நீரை 12 அவுன்சுக்குக் குறையாமல் வெறுவயிற்றில் தினமும் அருந்துதல், இது அதிகாலை மலசலம் கழித்தலை வழமைப்படுத்தும், தினமும் சிரசுக்கு எண்ணெய் வைத்தல், வாரம் ஒருமுறை எண்ணெய் முழுக்குச் செய்தல். குறித்த வேளையில் அளவான உணவை உண்டு போதுமான நீர் அருந்துதல், தினமும் பகல் உணவில் நெய்யும், மோரும் சேர்த்துக்கொள்ளல், காரசார புளிப்புக்களை அளவாகச் சேர்த்தல், நார்ப் பொருள்களையும், இலைக் கீரைவகைகளையும் தினமும் உணவின் சேர்த்தல், உணவின் பின் பழங்கள் சாப்பிடுதல் இரவு உணவின் பின் பசும்பால் அருந்துதல், இலகுவான தேகாப்பியாசங்களைத் தினமும் செய்து வருதல் ஆரோக்கியத்துக்கு நன்மை பயப்பதுடன், மூல வியாதியும் வரவொட்டாது தடுக்கும்.

## நோய் வந்தபின் கடைப்பிடிக்க வேண்டியவை

மூல நோய்க்கான காரணம், குறிகள் இருப்பின் முதல் ஒரு வைத்தியரை அணுகி, நோயைத் தீர்மானம் செய்து அவசியமெனின் சிகிச்சையையும் ஆரம்பித்துக்கொள்ள வேண்டும். நோய் உபத்திரவத்தினின்றும் விடுபடுவதுடன் நோய் மீண்டும் ஏற்படாதவாறு உணவுத் திட்டத்தையும் ஆரோக்கிய வழிகளையும் பேணவேண்டியது மிக அவசியமாகும்.

நோய்க்கான காரணங்களை விலக்கி, அதிகாலையில் சுட்டாறிய நீரை அருந்தி இயற்கையைத்தினம் வெளியேற்ற வழக்கப்படுத்திக் கொள்வதுடன் சூரிய உதயத்தின் முன் திறந்த வெளியான இடத்தில் கம்பளம் விரித்து, அதில் வஜ்ஜிராசனத்தில் அமர்ந்து (நாடி சுத்தி) மூச்சை ஒரு மூக்குத் துவாரத்தால் இழுத்து மெதுவாக மறு துவாரத்தால்விடல். பின் அதேதுவாரத்தால் இழுத்து, மறு துவாரத்தால் விடுவதாகும். வலது கைக் கட்டை விரலையும், நடுவிரலையும் மூக்கின் இருபுறமும் அமர்த்தி எடுத்து மூச்சை விடுதல் வேண்டும். இவ்வாறு பத்து பதினைந்து எண்ணிக்கைகள் செய்த பின் இரு மூக்கினாலும் நிறைந்த காற்றை சுவாசப் பையுள் இழுத்து விரித்து அடக்கிக் கொண்டு பின் மெதுவாக இருமூக்கினாலும் விடும் பிராணயமம் என்னும் பயிற்சியை இரண்டு மூன்று நிமிடங்களுக்குள்செய்த பின், தரையில் நிமிர்ந்து கால்களைநீட்டிப்படுத்து இருகால்களையும் முன் புறமாக மேல்நோக்கி இடுப்புவரை உயர்த்தி பின் இடுப்பைக் கைகளில் பிடிப்பதுபோல் உயர்த்தி படிப்படியாக தோள் வரை உயர்த்தப் பயிற்சி செய்ய வேண்டும். இதை விபரீதகரணி என்று சொல்வர். இந்த ஆசன நிலையில் மூச்சை மெதுவாக உள்ளிழுத்து விடுவதுடன் உடலின் (கீழ்த்துவாரங்களான) குதவாய்ஜனனேந்திரியத் துவாரம் சிறுநீர்த் துவாரம் இவற்றை உள்நோக்கி தசைகளை இழுந்து இறுக்குவதுபோல் பயிற்சி செய்யவேண்டும். இப்பயிற்சி முறையை ஒவ்வோர் நிமிடமாகக் கூட்டி 5 நிமிடம்வரை செய்யலாம். இதன் பின் மீண்டும் கால்களைக் கீழே இறக்கி கைகளையும் அகலப் பரப்பி உடலைத் தளர்த்தி சாதாரணமாக





மூச்சுவிட்டு ஆறுதலாக எழுந்திருக்கவும். இது சவாசனம் எனப்படும். இந்த ஆசன முறையால் ஆண் பெண் இருபாலாருக்கும் ஏற்படும் குத நெகிழ்ச்சி குடல் இறக்கம், நீரிழிவு, குதி வாதம், உடற் பருமன் குறைந்து நல்ல பலன் கிடைக்கின்றது.

பருத்த உடல் உள்ளவர்களும் வயோதிபர்களும் மலம் கழிக்கும் போது வலது கையினால் இடதுபுற அடி வயிற்றைத் தூக்கி வலது புறம் சாய்ந்து மலம் கழிப்பதால் ஒரே தடவையில் மலம் வெளியாகுமென்பது அனுபவரீதியான ஒன்றாகும்.

தினமும் நல்லெண்ணெய் அல்லது வைத்தியரால் சிபார்சு செய்து தரப்படும் எண்ணெயைத் தலைக்கு வைத்து வருவதுடன், வாரம் ஒரு முறை எண்ணெய் முழுக்குச் செய்து ஓய்வெடுத்தல் அவசியம். உணவில் தீட்டுப் புழுங்கல் அரிசி, அல்லது தவிட்டுப் பச்சை அரிசி மொட்டைக் கறுப்பன் அரிசிச் சோறும், பாசிப் பயறு, உழுந்து, துவரை பருப்புக்களைத் தாராளமாகவும், சோயா கடலை வகைகளை முளைக்கட்டியும் சமைத்து உண்ணவேண்டும்.

கீரை வகைகள் எல்லாம் உபயோகப்படுத்தலாம். பசளி, சிறுகீரை மணத்தக்காளி இலை, புளிச்சக்கீரை, வெங்காயத்தாள். வட்டத்துத்தி இலை, பிரண்டைத் துளிர், புங்கன் துளிர், கொன்றல் துளிர், வெங்காயம் சேர்த்து தனித்தனி நெய்யில் வதக்கி சம்பலாக அரைத்து உபயோகப்படுத்தலாம். மரக்கறிகளில் சேட்டிக்கரணைக் கிழங்கு, கோயிலாக் கிழங்கு, சேனைக்கிழங்கு, தாமரைக் கிழங்கு, முள்ளங்கி, சாம்பல் வாழைக் கிழங்கும் மிகவிசேடமானவை.

நார்ப் பொருள்களான வாழைப் பூ, அகத்திப்பூ, வாழைத்தண்டு, தாமரைத்தண்டு, நெல்லிக்காய், மாமிசங்களில் வெள்ளாடு, உடும்பு, ஆமை இவற்றின் மாமிசமும், வெள்ளாட்டின் ஈரலும் சிறிய மீன் வகையும், வேகவைக்காத அல்லது அரை வேக்காட்டு முட்டையும் பழ வகைகளில் வாழைப்பழம், பப்பாசிப்பழம், வில்வம் பழம், விளாம்பழம், மாம்பழமும் நன்மை பயக்கும்.

பகல் உணவில் நெய்யும், மோரும் சேர்ப்பதும், தாகத்திற்கு மோர், மாமிச ரசம், பழச்சாறு குடிப்பதும், இரவில் பசும்பால் அருந்துவதும், நன்மை பயக்கும். பணம் பண்டங்கள், பழப்புளி, புகையிலை. அகத்தியிலை, வாதநாராயணி, சண்டியிலை, பாகற்காய். பூசனிக்காய், கோழியிறைச்சி, காப்பி. தேநீர் அருந்துவதும், சாராயம் குடிவகைகள் குடிப்பதுவும், கடுமையான பேதி (PURGATIVE) மருந்து உபயோகிப்பதும், இரவில் நெடுநேரம் நித்திரை விழிப்பதும் பகலில் தூங்குவதும். வெய்யிலில் அலைவதும், உலைமுகத்தில் வேலைசெய்வதும், குந்தி இருப்பதுவும் உடல் உறவு கொள்ளுவதும் அவசியம் தவிர்க்கவேண்டும். இருக்கைமுறை (COMMODE) மலக்கழிப்பினை உபயோகப்படுத்துவதும், மூலமுளைகள், குதநெகிழ்ச்சி போன்றவை ஆரம்பிக்கையிலேயே அவசியம் கடைப்பிடிக்க வேண்டிய அனுபவபூர்வமான முறைகளாகும்.

## மூலரோக சிகிச்சை முறைகள்

மூலநோயானது தோன்றியதுமே விரைந்து சிகிச்சைசெய்து உபத்திரவத்தையும், மலச்சிக்கலையும் போக்குவதுடன், கோளாறடைந்த தோஷங்களைச் சமப்படுத்தி, ரோகியை ஆரோக்கிய நிலை பெறச் செய்வதுடன் மீண்டும் நோய் தோன்றமுடியாது நடைமுறைகளைக் கைக்கொள்ளவேண்டும்.

## மூல ரோகத்தில் சத்திரசிகிச்சை

வாதம், இரத்தம் கோளாறடைந்து வரட்சி மிக்க பல முளைகளுடன் கூடியதும் அதிக இரத்தப் பெருக்கு உள்ளதுமான முளைகளைச் சத்திர சிகிச்சை மூலம் அகற்றிவிட்டு, சமன சிகிச்சை செய்ய வேண்டும். சரியானபடி சத்திர சிகிச்சை செய்யாது போயின் குதம் நழுவிப்போதலும், குதவீக்கம், அபானம், சிறுநீர், மலம் தடைப்படுதல், வயிற்றில் வீக்கம், வேதனை, மூலத்தால் அதிக இரத்தம் வெளியேறுதல் அல்லது சீழ்பிடித்து அழுகல் ஏற்பட்டு சிலவேளை மரணத்தை விளைவித்து விடக்கூடும். முறையான சத்திர சிகிச்சை செய்யப்பட்டபின்பும், உடல் உணவு ஆரோக்கியம் பேணாது விடின் மீணடும் முளைகள் ஏற்பட்டு வருத்தும்.

குதம் நழுவிப் போகாமலும், கொடிய துன்பத்தைக் கொடுக்கும் முளைகளை அழித்தும், மீண்டும் முளைகள் ஏற்படாது செய்வதுமான சிகிச்சை முறைகளே இங்கு விவரிககப்படுகின்றன.

## உபத்திரவத்தை உடன் தணிக்கும் இலகு சிகிச்சை முறைகள்

தேங்காய் புண்ணாக்குத் தூளையோ, இலாமிச்சம் வேர்த் தூளையோ குறோசாணி ஓமத்தின் தூளினையோ இளம் கன்றின் பசுஞ் சாணத்தையோ வாதத்தைப் போக்கும் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் விட்டு வறுத்து மிக இளஞ்சூட்டில் ஒத்தடமிட வரட்சியாக மிக விறைத்து நிற்கும் முளைகளின் வேதனை தணிந்துவிடும். இதுபோல் பொரிமாவையும் நெய் விட்டு வறுத்து ஒத்தடம் இடலாம். அதன் பின் வறுப்பதற்காக விட்ட எண்ணெய் வகையை ஆசனத்தின் பாகத்தில் பூசிவிட வேண்டும்.

ஆடாதோடை, எருக்கு, ஆமணக்கு, வில்வம், முள்ளங்கி, நெல்லி, நான்றி, மாவிலங்கு, மூங்கில் இவற்றின் இலைகளில் கிடைக்கக்கூடிய இலைகளை அல்லது ஏதேனும் ஒன்றின் இலைகளையேனும் நீரில் அவித்து, அந்நீரால் மூல முளைகளை நனைத்துக்கொள்வதும், வாத எண்ணெய் நல்லெண்ணெய், நெய் ஏதேனும் ஒன்றைப் பூசிக்கொண்டு முற்கூறிய இலைகள் அவித்த நீரில் இடுப்பளவு நனையக்கூடியதாக நீரினுள் உட்கார்ந்திருப்பதும் வேதனையை மிகக் குறைத்து விடும்.

புளியம் இலையை கோசலத்தில் அவித்து ஆவியை மெதுவாக மூலத்தில் பிடிக்க தினவும் வீக்கமும் உள்ள நிலைமை தணிவடையும்.

கண்டங் கத்தரி விதைகளை நெய்யிற் கலந்தும், குங்கிலியத்தை நெய்யில் கலந்தும். நெருப்பில் இட்டும் மூலத்திற்குப் புகை பிடிக்க அரிப்பு, நீர் கசிதல். வீக்கம், சினப்புமிக்க மூல முளைகளின் வேதனை தணியும்.

எண்ணெய்க் குளியலின்போது வடித்த கஞ்சியையோ வெந்தயம், பயறு, கடலை இவற்றின் மாவினைக் கரைத்தும், தலை தேகம் முழுவதும் பூசிக்குளிக்க தேககாங்கையும், களைப்பும் நீங்கிவிடும்.

## உட்சிகிச்சைகள்

ரோகிக்கு மலபந்தத்தைப் போக்கி, உணவில் விருப்பையும், பசியையும் ஏற்படுத்த திரியூஷணாதி சூரணத்தையோ பஞ்ச தீபாக்கினி சூரணத்தையோ ஹிங்குவாஷ்ட சூரணத்தையோ உணவின் முன் வெந்நீரில் அல்லது நெய்யுடன் கொடுக்க வேண்டும்.

கடுக்காய்த் தூளை, வெல்லம் கலந்து அல்லது சிவதைத் தூளை திரிபலாக் கஷாயத்திலும் இருவேளை உணவின் பின் கொடுத்துவர குதத்தில் சேரும் மலத்தை இலகுவாக வெளியேற்றுவதுடன், முளைகளையும் ஒழித்துவிடும்.

கொன்றல் பழத்தை சுட்டாறிய நீரில் ஊறவிட்டுப் பிசைந்து வடித்துக் கொண்டு சர்க்கரை அல்லது பனங்கட்டி கூட்டி, சுக்குத் தூள் கலந்து பருகுவதும், கொன்றல பழ ரசத்துடன் சர்க்கரை, நெய், யவச்சாரம், இந்துப்பு கலந்து இரண்டு வேளை ஆறு அவுன்சுக்குக் குறையாமல் அருந்தி வர தேக வெப்பு, மூல அழற்சி, வீக்கம் வரட்சி கடுப்புடன் கூடிய மூல முளைகள் தணிந்து மலச்சிக்கல் நீங்கும்

கடுக்காயை கோசலத்தில் ஓரிரவு ஊறவிட்டு. மறுநாள் சுத்தமாகக் கழுவி அரைத்து. வெல்லம் சேர்த்து இருவேளை சாப்பிட்டு வருதலும், கடுக்காய்த்தூள், அல்லது திரிபலைத் தூளை மோருடன்





கலந்து பருகுவதும் கொடிவேலி, செவ்வியம். இரண்டும் சம அளவு தூளாக்கி மோரில் கலந்து பருகுவதும், விளாம்பழம் அல்லது வில்வம் பழத்தை மோருடன் கரைத்துப் பருகுவதும் வாதத்தினாலோ, கபத்தினாலோ, வாத கபத்தினாலோ ஏற்பட்டவரட்சியும் அழலும் மிகுந்த மூல வியாதியில் வெண்ணெயுடன் கூடிய மோரும், கபம் மிகுந்து நீர்ப்பற்றும் சீழும்வடியும் மூல வியாதியில் வெண்ணெய் நீக்கிய மோரும் காலநிலைக்கேற்ப வைத்தியர் ஆலோசனையுடன் தொடர்ந்து 7 முதல் 10 நாட்களுக்கு மோரில் மேற்படி பொருட்களைக் கலந்து உபயோகிக்க மிகுந்தகுணமளிக்கும்.

## வஸ்தி சிகிச்சை (ENEMA)

பலா தைலத்தையேனும், க்ஷீரபலா தைலத்தையேனும் பாலுடன் கலந்து, தசமூல கசாயத்தை பாலும், நல்லெண்ணெய்யும் சேர்த்துக் காய்ச்சி முறைப்படி வஸ்தி சிகிச்சை செய்வதால் குதம், நழுவிப் போவதும், குதவீக்கம் நீர்க்கசிவு, அழற்சி வரட்சித் தன்மைகள் நீங்கி மூல முளைகளும் நீங்கிவிடும்.

## இரத்தப்போக்கும், நிணமும் வெளியேறும் மூல வியாதிகளில் சிகிச்சை:

### தணிவடைவிக்கும் உட் சிகிச்சைகள்

இரத்தமோ, துர்நீரோ நன்கு வெளியேறிய பின். தடுப்பதும் கோடை காலமானால் அதிக இரத்தப்பெருக்கு ஏற்படாமலும் உடன் தடுக்கும் சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டும்.

மாதுளம் கோதும், சந்தனமும் சம அளவில் கசாயம் செய்து அடிக்கடி பருகுவதும்!
சந்தனம் காற்பங்கும், சுக்கும் சேர்த்துக் கசாயம் செய்து அருந்துவதும், இலாமிச்சு, மரமஞ்சள், சந்தனம் சமன் சேர்த்துகசாயம் செய்து அருந்துவதும்; இரத்தைப் பெருக்கை நிறுத்திவிடும்.

புளிப்புக் கீரை அல்லது வட்டத்துத்தி இலை, சிறு நாகம் பூ, தாமரைக் கிழங்கு, நெற்பொரி சேர்த்துக் காய்ச்சிய கஞ்சியை, வெண்ணெய் சேர்த்து அருந்துவதும்;

வெங்காயம், நற்சீரகப் பொடி சேர்த்து மோர் அருந்துவதும்; பாசிப் பயற்றை கஞ்சியாகக் காய்ச்சி, புளித்த மோரைக் கலந்து அருந்துவதும்;

பயறு, துவரை, உழுந்துபோன்ற தானியத்தை நன்கு அவித்து கஞ்சியாக்கி பசும்பால் அல்லது புளித்த மோர் அல்லது புளிப்புப் பழங்களின் ரசம் எவையேனும் கலந்து அருந்தச் செய்வதால் இரத்த மூலம் கொதிப்படையாது தணிந்துவிடும்.

மாமிச ரசத்திலேனும் புளிப்புப் பழ ரசத்திலேனும் சர்க்கரையும் சிறிது மிளகும் சேர்த்து அருந்தச் செய்வதும் மிக உசிதமானதாகும்.

## உபத்திரவம் தணிக்கும் வெளிச் சிகிச்சைகள்

அதிமதுரம், ஆல், அத்தி, அரசு, இத்தி, பூவரசு, மருது வேம்பு இவற்றின் பட்டை கிடைக்கக்கூடியவற்றை கசாயமாக்கி, மிக இளம் சூட்டில் மூலத்தை அடிக்கடி நனைத்துக்கொள்வதும்;

அதிமதுரம், தாமரைத் தண்டு, சந்தனம், இலாமிச்சு அவித்த நீரில் இடுப்புவரை அமிழ்ந்திருந்து குளிப்பதும்;

மேற்படி குளிர்ச்சியான சரக்குகளில் காய்ச்சப்பட்ட எண்ணெயை ஆசனம், இடுப்புப் பகுதிகளில் பூசிக்கொள்வதும், அதிமதுரம், நொச்சி சேர்த்துக் காய்ச்சிய நீரிலோ, குளிர்ந்த நீரிலோ, பசும்பாலிலோ, இடுப்புவரை அமிழ்ந்திருப்பதும்:





அறுகம்புல் வேருடன் பாலைக் காய்ச்சி நூறுமுறை நெய்யில் மடக்கிய தூர்வாதி கிருதத்தை ஆசனப்பகுதியெங்கும் பூசி, விசிறிக்கொள்வதும்;

பிள்ளைக் கற்றாளையைப் பிளந்து, சதையைத் துணியில் வைத்து மூலமுளைகளில் வைத்துக் கட்டிக்கொள்வதும்;

குருத்து வாழையிலை, தாமரை இலைகளை அடிவயிற்றில் சுற்றி பரப்பிக் கட்டிக்கொள்வதும் உஷ்ணம் மிகுந்த காலங்களில் அழற்சியையும்; வேதனையையும்

இரத்தப்பெருக்கையும், எரிவும் மிக்க இரத்த, பித்தமூல ரோகிகளுக்கு மிகக் குளிர்ச்சியாக இதமளித்து தோஷங்களைச் சமப்படுத்தும்.

## அழற்சியும், குருதிப் பெருக்குமுள்ள மூலரோகிகளுக்கு வஸ்திசிகிச்சை (ENEMA)

சந்தனக் கசாயத்தில் பால், நெய் கலந்து வஸ்திசிகிச்சை செய்வதனால் மூலத்தில் கொதிப்படைந்ததோஷங்கள் சமப்பட்டு மீண்டும் ஏற்பட வாய்ப்பில்லாது போகிறது.

## மோரின் பலன்

மூலவியாதியில் மோரின், உபயோகம்மிகப்பயனுள்ளதாகும்; ரோகியின் நிலைமைக்கேற்றவாறு வெண்ணெயுடன் அல்லது வெண்ணெய் எடுத்ததுமான மோரை மூல வியாதியில் பயன்படுத்துவதால், நிலத்தில் ஊற்றிய மோரினால் எப்படி புற்கள் வேருடன் அழிந்து போகின்றனவோ அதுபோல் மூலரோகத்திலும் முளைகள் ஏற்படாது ஒழித்து உடலைக் காக்கின்றது எனச் சரகஸம்ஹிதை வலியுறுத்துகின்றது.

# அனுபவ பூர்வமான இலகு சிகிச்சை முறைகள்

1. நாயுருவி இலையை அரைத்து கொட்டைப்பாக்களவு உருட்டி. நல்லெண்ணெயில் குழப்பி, 7 நாட்களுக்கு 2 வேளை வீதம் சாப்பிட்டு வருவதாலும்,

2. நாயுருவிச் சாற்றை ஒரு மேசைக் கரண்டி அளவு 4 அவுன்ஸ் பசும்பாலில் கலந்து குடிப்பதாலும்;

3. இரண்டுபிடி வட்டத்துத்தி இலையை ஓரிரவு நீரிலே ஊறவிட்டுப் பிசைந்து எடுத்த சாற்றை நல்லெண்ணெய் அல்லது பால் கலந்து 3 நாள் இரண்டு நேரம் அருந்தி வருவதுடன், வட்டத்துத்தி இலை ஊறவிட்ட நீரினால் ஆசன வாயைக் கழுவி வருவதாலும், மூல முளைகள் நீங்கும்.

4. வட்டத்துத்தி இலையை ஆமணக்கெண்ணெய் விட்டு வதக்கி மூலத்தில் கட்டிவர மூல வீக்கம், கட்டி. கடுப்பு, வேதனைகள் நீங்கும்.

5. பிரண்டைக் கொழுந்தை நெய்யில் வதக்கி அரைத்து கொட்டைப் பாக்களவு காலை மாலை உண்டுவர இரத்த மூலம் ஒழியும்.

6. ஈரவெங்காயத்தை தணலில் சுட்டெடுத்து நன்கு அரைத்து பச்சை வெண்ணெய் கூட்டிக் குழப்பி மூலத்தில் கட்டி வர மூலக் கட்டி, திரட்சி, வீக்கம், தினவு, கடுப்பு நீங்கிவிடும்.

7. வேப்பம் பருப்பை அரைத்து தேசிக்காய்ப் பிரமாணம் உருட்டி எடுத்து அடைபோல் இலையில் தட்டிச் சூடாக்கி இளம் சூட்டில் முளைகளில் 3 நாள் கட்டி வர, துர்நீர்க் கசிவுள்ள, கிருமித் தொற்றுள்ள, வீக்கமான முளைகளும் கரைந்து





விடும். அம்மூன்று நாளும் துத்தி இலை பிசைந்தநீரை நல்லெண்ணெய் கலந்து, இரண்டு வேளை அருந்திவர மூல முளைகளும் வேருடன் அற்றுப்போம்.

8 தேங்காய்ப்பூக்கீரையை அரைத்து மூன்று தடவை மூலத்தில் வைத்துக் கட்டினால் மூலக்கடுப்பு வேதனை நீங்கும்.

9. கொன்றல்துளிரை அல்லது ஆவரசம் கொழுந்தை விளக்கெண்ணெயில் வதக்கி மூலத்தில் கட்ட, மூலக்கட்டி பவுந்திரம் மூல முளைகள் கருகிப்போகும். உடன் கடுப்பும் நீங்கி விடும்.

10. கல்மதத்தை பசுவெண்ணெயில் அரைத்து, மூலமுளைகளில் தடவினால் முளைகள் கரைந்துவிடும்.

11. முருங்கைப் பூ, இலை, இலைத்தண்டு இவற்றுடன் நற்சீரகம் வெந்தயம் சம அளவு எடுத்துவைத்து சிறுசிறு பொட்டணமாகக் கட்டி, சரண்டியில் பசு வெண்ணெயை வைத்து, அதன்மேல் ஒவ்வொரு பொட்டணமாகச் சூடேற்றி வெண்ணெய் உருகி பொட்டணத்துள் சேர்ந்ததும் தாங்கக்கூடிய சூட்டில் ஒத்தடம் கொடுத்துவர அபானமும் வெளியாகி கடுப்பும் வலியும் உடனே நீங்கும்.

12. ஒன்பது துத்தி இலையை தினமும் வெறுவயிற்றில் நாள் தோறும் 40 நாள் உண்டுவருதலாலும்.

13. பொற்தகரை இலையை அரைப்பிடி அளவு காலையில் மூன்று தினம் உண்டு வருதலாலும்.

14 நற்சீந்தில் இலைகளை குருணியாக நறுக்கி, மிளகு, சீரகம் உப்புச் சேர்த்து நெய்யில் வதக்கி, அரைத்து சோற்றுடன் மோரும் கூட்டி உண்டு வருதலாலும்.

15. மாங்காய்ப் பித்தை நறுக்கி, காயவிட்டு இடித்துச் சூரணித்து வெண்ணெயோடு இரண்டு வேளை உண்டுவருதலாலும்.

16. வாழைப் பூவைத் துவைத்துச் சாறெடுத்து, சீரகம் அரைத்து பாக்களவு கலந்து குடித்துவர, இரத்தப் பெருக்கும், மூலக் கடுப்பும் உடன் நிற்கும்.

17. துத்தி இலையுடன் பாசிப் பயறு, வெங்காயம், மிளகாய் சிறிது தேங்காய்ப்பால், சிறிது உப்புச் சேர்த்து கறி சமைத்து உண்டு மோரும் அருந்த மூலவியாதி தணிந்து விடும்.

18. 2 போத்தல் ஆட்டுப்பாலில் 80 கிராம் கொடி வேலிவேரைத் தட்டிப் போட்டு சிவக்கக்காய்ச்சி, உறை குத்தி மறு நாள் கடைந்து வெண்ணெய் எடுத்து, வெண்ணெயைச் சோற்றுடனும், மோரைத் தாகத்துக்கும் 7 முதல் 10 நாட்கள் அருந்தி வர மூலமுளைகள் வேரோடு நீங்கும்.

19 வல்லாரைச்சாறு பழம் பாசிச்சாறு நல்லெண்ணெய், நெய், எட்டில் ஒன்றாய் வற்றவிட்டு எடுத்த மிளகுக்கசாயம் யாவும் ஒவ்வொரு படிவீகம் கலந்து, காய்ச்சி, மிருதுபத எண்ணெய்யாய் வடித்து, தலைக்கு வைத்துவர மூலச்சூடும். மூல வாய்வும் நீங்கும்.

20. கோயிலாத் தண்டுச்சாறு ஒரு மேசைக்கரண்டியை 3 அவுன்ஸ் ஆட்டுப்பாலில் கலந்து காலையில் குடித்தும், அதன் பிழிந்த சக்கையை தேங்காய்ப்பால் வெங்காயம் கூட்டிக் கறி சமைத்து உண்டுவர, மூலவியாதி நீங்கும்.

21. கற்றாளம் சோற்றைத் துண்டுகளாகவெட்டி கழுவி எடுத்து பால் சர்க்கரை சேர்த்து உண்டு வருவதாலும்.

22. இலாமிச்ச வேரை விழுதாய் அரைத்து பாக்களவு எடுத்து வாழைப்பூச்சாற்றில் கரைத்துக் குடித்துவர இரத்தம் சீறுவது நிற்கும். கடுப்பும் எரிவும் தீரும்.

23. சர்க்கரை 25 கிராம், நெய் அரைப்போத்தல் எலுமிச்சம் பழச் சாறு காற்போத்தல் விட்டு, மெழுகாகும் வரை மத்தால்





கடைந்து ஒவ்வொரு கொட்டைப்பாக்களவு, ஏழு நாட்கள் இரண்டு வேளை வீதம் உண்டுவர, இரத்தம் வெளியேறும் வேதனைமிக்க இரத்தமூலம் நீங்கிவிடும்.

24. ஆவரசம் துளிர், பூ, பட்டை, அறுகம்வேர் சம அளவு எடுத்து சூரணம் செய்து நான்கு விரற்கனம் சூரணத்தை, பசுநெய்யுடன் இரண்டு வேளை ஒரு மண்டலம் உண்டு, மோரும் அருந்தி வர, மூலமுளைகளும், வேதனைகளும் தீரும்.

25. எருமைக் கொம்பைச் செதுக்கியெடுத்து குகையில் (தங்கம் உருக்கும்) வைத்து ஊதிக் கரித்து சேகரித்த கரித்தூளுடன் பச்சை வெண்ணெய் கூட்டிக் குழப்பி மூல முளைகளில் மூன்று நாள் பூசிவர முளைகள் விழுந்துவிடும். பின்மாவிலங்கம் இலை வெதுப்பி ஒற்றடமிடவும்.

26. பெருங்காயம், படிகாரம், சிரட்டைக் கரி இவை ஓரெடை எடுத்து எலுமிச்சம் சாற்றில் மைபோல் அரைத்து, உலர்த்தி பின் சிரட்டைக் குழித் தைலத்தில் குழப்பி 3 நாள் பூச மூலக் கட்டி (பகந்தம்), விறைப்பான மூல முளைகள் கரைந்துவிடும்

27. படிகாரத் தூளையும், பூங்காவியையும் சமமாகக் கலந்து பச்சை வெண்ணெயில் குழப்பி மூலத்திற்பூச மூலமுளைகளால் இரத்தம் பெருகுவது நின்றுவிடும்.

28. அபினியைக் கற்றாளைச் சோற்றில் அரைத்து, வில்லையாக உலர்த்தி, அகலில் இட்டு சீலை மண் செய்து, காடைபுடத்தில் எரித்தெடுத்த பற்பத்தை நெய்யில் அல்லது வெண்ணெயில் கொடுக்க மூல வியாதி தீரும்.

29. கொம்பரக்கைப் பொடித்து தேனில் இரண்டு வேளை உண்டு வருதலாலும்;

30. காட்டாத்திப் பூவை கஷாயம் செய்து தேனுடன் குடிப்பதாலும்;

31. கால்படி பசும்பாலில் 3 எலுமிச்சம் பழங்களைப் பிழிந்து விட்டு, குச்சி கொண்டு கலக்கி, சிறிது நேரத்தின் பின் திரைந்த பாலின் தெளிந்த நீரைக் குடிப்பதாலும்.

32. ஆலமரத்தின் மிக மெல்லிய விழுதையும் ஆலம் மொட்டினையும் சமமாக எடுத்து கல்கமாக அரைத்து பாலில் கலந்து இரண்டுவேளை குடிப்பதாலும்;

33. கடுக்காயைச் சூரணித்த தூளையேனும், கடுக்காய்க் கஷாயத்தையேனும் மூலத்தில் தூவி அல்லது கழுவுவதாலும்:

34. செம்பருத்தி இலைகளை நல்லெண்ணெயில் வதக்கி 3 நாள் உண்பதாலும்.

35. கறுப்பு எள்ளைப் பொடித்து சக்கரை கலந்து ஆட்டுப்பாலில் கரைத்து சில நாட்கள் குடித்துவருதலாலும்.

36. மாயாக்காய் பொடியை நெய்யுடன் குழப்பி மூலத்தில் பூசி வருதலாலும், கடுப்பும் வேதனையும் மிக்க குருதி வெளியேறும் மூல நோய் தணிவடையும்.

37. பொடுதலைச் சாறு, பிரண்டைச்சாறு, நல்லெண்ணெய் சமனாகக் கலந்து 3 நாள் உட்கொள்ள மூல வேதனைகள் நீங்கும்.

38. சீந்தில் சாற்றை மூலத்தில் பூசிவருதலாலும்.

39. கடுக்காய் தூளை ஆமணக்கெண்ணெய் விட்டு வறுத்துச் சேகரித்து இரண்டு வேளை பசுவெண்ணெய், அல்லது நெய் கூட்டி உண்டுவர குதம் நெகிழ்ந்து, இறங்குவது நின்று உள்வாங்கிக்கொள்ளும்.

40. வெண்காரத்தைப் பொடிசெய்து, பசுநெய்யில் குழப்பி 2 வேளை சாப்பிட்டு மூலத்தில் பூசியும் வர, மூலம் சுருங்கி உள்வாங்கி குதநெகிழ்ச்சி நீங்கிவிடும்.





41. நாவற்பட்டையை அரைத்து எருமைத் தயிரில் குழப்பி 2 வேளை உண்ண மூலமுளைகள் கரைந்துவிடும்.

42. இலவங்கப் பட்டை, விலாமிச்சை வேர், மரமஞ்சள் சமன் கூட்டி இடித்து குழந்தைகள் சிறுநீரில் கலந்து சூடாக்கி மூலத்தில் ஒத்தடம் இடுதலாலும்;

43. மாவிலங்கு, கள்ளி, எருக்கன் இலைகளைக் கூட்டித் தணலிலிட்டு புகையை மூலத்தில் பிடிப்பதாலும்;

44. ஒதியம் பட்டையை செம்மறியாட்டுப் பாலில் அரைத்துக் கரைத்து மூன்று தினங்கள் உட்கொண்டுவர, இராமனிடம் வலுவிழந்த இராவணன்போல் உள்மூலம், புற மூலங்களும் வேதனையற்றுத் தீர்ந்துவிடும்.

45. சிற்றாமணக்கு இலை, வெங்காயம்சமன்பொடியாய் அரிந்து ஆமணக்கு எண்ணெயில் வதக்கி, இரவில் இளஞ்சூடாக ஒத்தடமிட்டு அதனையே ஆசன வாயிலில் கட்டிவர ஆசனக் கடுப்பும் எரிச்சலும் நீங்கிவிடும்.

46. காட்டுக்கரணை, மருள்கிழங்கு, பிரண்டை வேர் சமன் உலர்த்தி, இடித்துச் சூரணித்து, பிட்டவியலாய் அவித்து, உலர்த்திப், பதினான்கு நாட்கள் மோருடன் இருவேளை உண்டுவர, சகலவிதமான மூலநோய்களும் அகன்றுவிடும்.

47. அதிமதுரத் தூளை, இருவாரம் இருவேளை, தேன், நெய், பால் போன்ற அனுபானங்களில் உண்டுவர. உள் மூலரோகக் கோளாறுகளும் வேதனைகளும் நீங்கி, நீண்ட கால மலச் சிக்கலும் வழமைக்கு வந்துவிடும்.

48. நீலி வேர், நாயுருவி வேர், விஷ்ணு கிராந்தி, சங்கன் வேர்ப் பட்டை சமன்கூட்டி எட்டுப் பங்கு நீரில் எட்டில் ஒன்றாய் வற்றக் காய்ச்சி சில தினங்கள் இருவேளை பருகிவர, உள்மூலம் குணமாகும்.

49. குப்பை மேனியிலை, தயிர்வளையிலை, செவ்வியம், கிராம்பு இவற்றை அரைத்து பசு வெண்ணெய் கூட்டி அதிகாலை சில நாட்கள் உண்டுவருவதாலும்:

50. கறுத்தப் பூவிலை, நொச்சியிலை, அரைத்து வெண்ணெய் கூட்டி, பாக்களவு காலையில் உண்பதாலும் உள்மூலம், குணமாகும்.

51. முதிர்ந்த அரச மரத்தின் பட்டையை மேற் புறணி நீக்கி, உலர்த்திச் சூரணம் செய்து பனைவெல்லம் பிசைந்து சுண்டக்காய் பிரமாணம் 5 நாள் இருவேளை பாலிலோ, மோரிலோ உண்டுவர சீழ்மூலம் இரத்தமூலம் பௌந்திரம் முதலிய மூலவியாதிகள் நீங்கும்.

52. நிலப்பனங் கிழங்கினைச் சூரணித்து கோசலத்தில் அல்லது பசு மோரில் கரைத்து இருவேளை ஒரு மண்டலம் கொள்வதாலும்; நாவற்பட்டை ஊறிய நீரில் மேற்படி சூரணத்தைக் கலந்து சில நாட்கள் உண்பதாலும் மூல முளைகள் அற்று விடும்.

53. வெள்ளறுகுச் சமூலம் பொடிசெய்து சக்கரை கூட்டிஒரு மண்டலம் உண்டு வருதலாலும்.

54. வேப்பிலைக் கொழுந்தை, உப்புச் சேர்த்து ,கழுநீர் விட்டு அரைத்துஉருட்டி சாப்பிட்டும், கோசலம் விட்டு அரைத்து ஆசனத்துக்குத் தடவிவருதலாலும் அனைத்து மூலரோகங்களும் தீரும்.

55. பிரமதண்டின் பாலை, மூலமுளைகளில் பூச முளைகள் சிறுத்து உள்வாங்கிவிடும்.

56. நொச்சித் தளையைக் கசாயமாக்கி நெருப்பனலில் சிவக்கப் பழுத்த செங்கல்லை அக்கசாயத்தில் போடவரும் ஆவியை விறைப்பான கனத்த மூல முளைகளில் பிடிக்க நீர்பொசிந்து வெளியேறி முளைகள் அற்றுவிடும்.





57. சாம்பிராணி, வெள்ளைக் குங்குலியம். சுத்தமாகக் கழுவி சன்னமாக நறுக்கிய தலைமயிர் யாவற்றையும் கலந்து அரையடி உயரமும், நடுவே துவாரமும் உள்ள ஆசனத்தில் ரோகியை இருத்திமூலமுளைகளுக்கு நேராக, மேற்படி தூளை தணலில் இட்டுப் புகைப்பிடித்து வரவேண்டும் இவ்வாறு மூன்று தினம் இருவேளை செய்து வர குதம் வெளித்தள்ளுதல், ஆசனக் கடுப்பு, வீக்கம் இரத்தம் வெளியேறுதல், ஆகியன நீங்கி முளைகளும் சிறுத்து உள்வாங்கிவிடும்.

58. இதுபோல் பன்றிக் கொழுப்பை அல்லது கழுதை லத்தியை உலர்த்திப் புகை பிடிக்கவும் மேற்படி குணம் பெறலாம்

59. மிளகாய்ப் பழம் 7, பூ நாகம் 7, அரைத்து 3 அல்லது 5நாள் இரண்டுவேளை உட்கொண்டு இச்சாபத்தியம் இருக்க, மூல முளைகள் கரைந்து கூட்டுடன் விழும்.

60. கருங்கோழியின் வயிற்றைக் கீறி. அதன் தீனிப்பையுள் இருக்கும் கற்களையும் நெல்லையும் எடுத்துப் பொடித்து, சிறிது வெற்றிலையில் பரப்பி, மூலத்தில் கட்டி வர, இரத்த மூல முளைகள் உடனே உள்வாங்கி விடும். 4 அல்லது 5 நாட்கள் இவ்வாறு செய்தல் வேண்டும்.

61. வடக்கே போகும் முருங்கை வேரை, ஞாயிறு காலையில் சேகரித்து. அரைத்து, பாக்களவு, வெந்நீரில் தொடர்ந்து மூன்று நாள் உண்டுவர ஒன்றிரண்டு தடவை பேதியாகும். அதன்பின் ஸ்நானம் செய்து, மோர் சாதம் சாப்பிட்டுவர சகல மூலரோக உபத்திரவங்களும் அடியோடு நீங்கிவிடும்.

62. மிருதாரசிங்கியை, இரும்புக் குகையில்இட்டு, உலைமுகத்தில் உருக்க ஈயம் கிடைக்கும். அதன் எடைக்குச் சமன்வெள்ளீயம் கூட்டி மறுபடி உருக்க, ஒன்றுசேரும். அக்கலப்பீயத்தை மோதிரமாக்கி இடது கை மோதிர விரலில் அணிந்து, தினம் கால்களை அலம்பி வர ஒரு மண்டலத்தில் மூலமுளைகள் இற்றுவிழும். (இது அனுபவ உண்மையெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.)

63. சிறு கத்தரிப்பழம் ஒருசுண்டு (சிறுவழுதுணை) அலம்பி, நன்கு அரைத்து ஒரு சுண்டு புழுங்கலரிசி மாவுடன் பனங்கட்டி, நல்லெண்ணெய் கூட்டி, களிக்கிண்டி உண்டுவர கிருமித் தொற்று ஏற்படக்கூடிய சீழ்முலமும் துர்நீர்க் கசிவுள்ள மூல விரணங்களும் ஆறிவிடும்.

64. கவிழ்தும்பை வேர், நத்தைச்சூரி வேர், புழுங்கலரிசி சமன் ஊறவிட்டு வெண்பட்டுத்துணிசுட்ட சாம்பலும், கூட்டி அரைத்து நல்லெண்ணெய் அல்லது நெய் சேர்த்து அடை தட்டி சில நாட்கள் உட்கொள்ள சீதக்கடுப்பு, இரத்தக் கடுப்பு மூல வேதனை ஆகியன நீங்கும்.

65. திரிகடுகு, ஓமம், பூண்டு சம அளவு எடுத்து அதற்கு இருமடங்கு மூவிலை, முன்னையிலை சேர்த்து அரைத்துக்கொண்டு மருள்கிழங்கு கட்டி, அரைத்து தேசிக்காயளவு எடுத்து ஒரு படி புழுங்கலரிசிமாவுடன் யாவற்றையும் சேர்த்துப்பிசைந்து நல்லெண்ணெய் அல்லது நெய் கூட்டி, அடைதட்டி, சில நாட்கள் உண்டுவர மேற்படி ரோகங்கள் குணமாகும்.

66. ரசபற்பத்தை, பகலில் நல்லெண்ணெயில் குழைத்து, மூல முளைகளில் பூசியும், இரவில் சித்திர மூல இலையை அரைத்து நெய்யில் கலந்து முளையில் பூசி, காலையில் கழுவி, மீண்டும் அவ்வாறு செய்துவர மூலமுளைகள் கரைந்துவிடும். (இது கைகண்ட அனுபவம்)

67. முளை நீக்கிய களற்சி விதையை நெய்விட்டு வறுத்தரைத்து சுண்டக்காய் பிரமாணம் 6 நாள் இருவேளை உண்டுவர எவ்வகை மூலமுளைகளும் சுருங்கிவிடும். பத்தியமான உணவுடன் உட்கொள்ள கைகண்ட பலன் கிடைக்கும்.

68. விலாங்கு மீனின் தலையை நீக்கி, தலைகீழாய் ஓரிரவு தூங்கவிட்டு, அதன் நீர் சிந்திய பின்பு, காலையில் நறுக்கி, சம அளவு வெள்ளை வெங்காயம் கூட்டி நெய்யும் ஆமணக்கெண்ணெயும் சமன் கலந்து நன்கு வதக்கிக் குழம்பு செய்து





வைத்துக்கொண்டு பத்துநாட்கள் இரண்டுவேளை உணவின் போதும் சிறிது கொடுத்துவர இரத்த மூலம் கண்டிப்பாக நிவர்த்தியாகும் மூலரோகம் அற்றவர்கள் உண்ணக்கூடாது.

69. திப்பலிப்பொடி 10 கிராம் பொடித்து, அரைப்படி கோதுமை மாவில் கலந்து, திருகு கள்ளியை நறுக்கி, நீர்விட்டுஅவிக்க வரும் நீராவியில் வேடு கட்டி, பிட்டுப் போல் அவித்து நல்லெண்ணெயும் வெல்லமும் கலந்து 7 நாள் சாப்பிட உள் மூலம் தீரும்.

70. புளியங்கொட்டையின் மேல் தோலை, ஊறவிட்டு அரைத்து தேசிக்காய் பிரமாணம், பசுப்பாலில் கலந்து 5 நாள் குடிக்க முளைமூலம் தீரும்.

71. அதுபோல், நீர்ப்பூலா இலையை அல்லது மாவிலங்கம் இலையை அரைத்து பாக்களவில் எடுத்து எருமைத் தயிரில் கலந்து 6 நாள் குடித்துவர முளை மூலம் கரைந்து விடும்.

72. கால் படி வேர்க்கொம்பு மாவை கால்படி தயிர் விட்டுக் காய்ச்சி, களியாக இறுக்கி, பின் அம்மியில் அரைத்து, சட்டியில் வறுத்து, தூளானதும் மீண்டும் தயிர்விட்டுக் கிண்டி அவ்வாறே ஐந்து அல்லது ஏழு தடவை செய்து எடுக்க பற்பமாகும் அதனை எருமைத் தயிரில் கொடுக்க மூலக் கடுப்பு உடனே குணமாகும்

73. கோரைக் கிழங்கும் தேங்காய்ப் பூவும் அரைத்து பச்சையரிசி மாவில் கலந்து ரொட்டி சுட்டுத் தின்று மோருங்குடிக்க தேக அனலும், மூல அழற்சிகளும் தணியும்.

74. வெண் குங்குலியப் பொடியை வெந்நீரும் நெய்யும், நல்லெண்ணெயும் விட்டுக் கடைய வெண்ணெய்போல் திரளும், அதை மூன்றுவேளை உண்டுவர, குதம் வெளிப்படாது உள் வாங்கும்.

75. நாயுருவி இலை, கருவேப்பிலை, சமன் அதற்கு மூன்று பங்கு கரணைக் கிழங்கு (உலர்ந்தது) சேர்த்து, இடித்து, சூரணித்து இருவேளை வெண்ணெய் மோரில் உண்டுவர ரத்த மூலம் தீரும்.

76. என்ளு, கடுகு, திப்பிலி, சுக்கு சமன் சூரணம் செய்து கொல்லன்கொவைக்கிழங்கை அவற்றிற்குச் சம எடையாகஎடுத்துச் சூரணித்து, வெண்ணெய்யில் உண்டுவர மூல ரோகங்கள் தீரும்.

77. சுண்டை வற்றல், வெந்தயம், மாதாளை ஓடு, நெல்லிவற்றல் ஓமம், மாம் பருப்பு, கருவேப்பிலை சமன்சேர்த்துச் சூரணித்து எருமைத் தயிரில் அல்லது பசுமோரில் 2 வேளை சில நாட்கள் உண்ண மூல ரோகங்கள் யாவும் தீரும்.

78. சாரணை, மிளகு, சுக்கு, கடுகு, ஓமம் சமன்கூட்டிச் சூரணித்து, பசுமோரைக் கொதிப்பித்து பத்து கிராம் சூரணத்தைக் கலந்து குடித்துவர கிருமித் தொற்றுள்ள பௌந்திரம் மற்றும் மூலரோகங்கள் தீரும்.

79. கற்கடக சிங்கி, இலவங்கப்பட்டை, கிராம்பு தனித்தனி வறுத்துச்சூரணித்து சமஎடை சர்க்கரை அல்லது பனங்கட்டி கூட்டி மூன்றுநாள் இரண்டு வேளை உண்டு மோர் குடிக்க சீதபேதி, இரத்தபேதி, இரத்தமூலம் தீரும். கடுமையான நிலையில் ஒரு குன்றி நாகபற்பம் கலந்து கொடுக்க உடன் குணமாகும்.

80. கரணைக் கிழங்கு (காடியில் அவித்துலர்த்தியது) 8 பங்கிற்கு 1/8 பங்கு கடுக்காய், சுக்கு, மிளகு, கொடிவேலி, சூரணித்துக் கலந்து இரண்டு வேளை உட்கொள்ள மூலநோய்கள் குணமாகும்.

81. திரிபலைக்கு இருமடங்கு சுத்திசெய்த குக்கில் பொடிசெய்து தேனும் கூட்டி அரைத்து சூடாக்கி மெழுகாக வைத்துக் கொண்டு இரண்டு வேளை உண்டு, மோரும் குடிக்க அஜீரணம் அருவருப்பு நீங்கி ஜீரண சக்தியுடன் இரத்தவிருத்தியும் பகந்தரம், மூல வெடிப்பு, புண்கள் மற்றும் சரும ரோகங்களும் நீங்கும்.



மங்களபதீ

82. அமுக்கிராங் கிழங்குத் தூளுடன் மூன்றுபங்கு நாயுருவி இலை கூட்டி அரைத்துக் கொண்டு அமுக்கிராங் கிழங்கிற்கு அரைப்பங்கு கருவேலம் பிசினை நீரில் ஊறவிட்டு சேர்த்து அரைத்து வில்லையாக்கி உலர்த்திக் கொண்டு இரவில் குளிர்ந்த நீரில் ஒருவில்லையை உரைத்து ஆசன வாயில் பூசி இலையை வைத்துக் கட்டிகாலையில் இள வெந்நீரால் கழுவிவிட, மூல முளைகளும் வேதனையும் அற்று விடும்.

83. சாதிக்காயும், சுத்திசெய்த அபினும் சம எடை கூட்டி அதற்கு இரு மடங்கு சர்க்கரை கூட்டி, அரைத்து, சுண்டைக்காய் அளவு மாத்திரை செய்து, மோரில் இருவேளை உட்கொள்ள இரத்த மூலம், கடுப்பு, நீங்கிவிடும்.

84. மாசிக்காயும், மைசாட்சி குக்குலுவும் சம எடை எடுத்துப் பொடித்து, கடுக்காய்த்தூள் இரு மடங்கு கூட்டி, பிரண்டைச் சாறு விட்டரைத்து தூதுவளங்காய் மாத்திரை செய்து மோரில் உட்கொள்ள, குடல்வாய்வு மலச்சிக்கல், மூலக் கடுப்பு, இரத்த மூலம் தீரும்.

85. மருதம் பட்டையை அரைத்து, கொட்டைப்பாக்களவு, பசுப் பாலில் கரைத்து இரண்டுவேளை 3 நாள் உட்கொள்ள முளைகள் கரைந்துவிடும்; வேதனைகள் தீரும்.

# பகந்தரம்

## (Fistula - in - Ano)

குதத்தில் அல்லது குதத்துவாரத்தைச் சுற்றி இரண்டரை அங்குல அகலத்துள் காய்ச்சல், வேதனையுடன் ஆழமாகப் பற்றித் தோன்றும் வெடிக்காத திரட்சிக்கட்டு, பவுந்திரம் அல்லது பிளவை என்றும்; இவ்வாறான திரட்சியானது குதப் பகுதியின் நேர்குடலில் அல்லது சிறுநீர்ப் பையயில், யோனிப்பாகம் அல்லது விதைப் பாகத்திலோ ஆழமாக ஊடறுத்துச் சென்று திறக்கும்போது பகந்தரம் என்றும் மாதவ நிதானம், சுச்சுருதம் என்ற நூல்கள் விவரிக்கின்றன.

### ஆரம்ப நிலை :

மூல நோயின் காரணங்களாலும், நறி குணங்களுடனும் ஆரம்பித்து குதப்பகுதியில் அரிப்பும் அழற்சியும், இடுப்பில் வேதனையும் ஏற்பட்டு வீக்கமும் தீவிரம் அடைந்து கடுமையான காய்ச்சலுடன் தோஷங்களின் தன்மைக்கேற்ப நாட்பட்டோ விரைந்தோ வீக்கம் திரட்சியாய் வெளியே முகம்வைத்து வெடித்து சீழும் இரத்தமும் வெளியாகி மிகுந்த வேதனையுடன் சிவப்பு நிறமான நீர், நுரை போன்று வெளியேறிக்காணும்.

பொதுவாக இந்நோய்க்கு சத்திர சிகிச்சையும் தேவைப்படும் இந்நோயின் தாக்கம் வீக்கமாகத் தென்பட்டவுடனேயே வீக்கம் கரைக்கும் வெளிப்பூச்சு மருந்துகளையும், சீழ்ப்பிடிக்கும் தன்மை ஏற்படாத அழுகல் அகற்றியாயும், உள்ளழல் ஆற்றியாயும் செயற்படக்கூடிய இலகு மலகாரி மருந்துகளை உள்பிரயோகமாக உபயோகிப்பதனால், வீக்கம் முதிர்ந்து சீழ்பிடிக்காமல் தடுத்துவிடலாம்.





### முதிர்ந்த நிலை :

சீழ்பிடித்துத் திரண்டு முகைவைத்துவிட்ட நிலைமையாயின் திரட்சியில் சீழ்த்தேக்கமேற்பட்டு, ஆழமாகப்பரவுமுன் சீக்கிரம் உடைத்து சீழை வெளியேற்றிவிடும் வெளிப்பூச்சு மருந்தினை உபயோகித்தும், கட்டு உடைந்ததும் சீழையும், பழுதடைந்த குருதியையும் நன்கு வெளியேற்றி துவர்ப்புக் குணமுள்ள கிருமிநாசினி நீரினால் விரணத்தைச் சுத்திசெய்து, விரணம் ஆற்றி மருந்துகளைப்பூசி புண்ணை ஆற்றுவதுடன், அழுகல் அகற்றியாயும், துவர்ப்பியாயும் உள்ள இலகுமலகாரி மருந்துகளை உட்பிரயோகமாகக் கொடுத்து, ஒவ்வாமையும், அழுகற் தொற்றும் ஏற்படாது ஒரே தடவையில் குணப்படுத்திவிடலாம். அவ்வாறல்லாது அலட்சியமாக நோயாளி விரணத்தைக் கவனிக்காதுபோனால் விரணம் ஆறாது உள்முகமாக அழுகல் தன்மையும் தொற்றும் பரவி, ஏனைய ஆசயங்களை ஊடறுத்துப் புரையோடி மரணத்தையேற்படுத்திவிடும்.

### பகந்தரத்தின் வகைகள் :

1 சதபோநகம்

வாததோஷத்தின் அதிகரிப்பால் ஏற்பட்டு உடையும் இக்கட்டியிலிருந்து நூற்றுக்கணக்கான துவாரங்களுடைய சல்லடைபோல் புண்கள் ஏற்பட்டு வருத்துவதாகும்.

2 உஷ்ட்ரக் கிரீவம்

பித்ததோஷம் அதிகரித்த நிலையில் செந்நிறமான ஒரு கட்டி ஏற்பட்டு நீண்டு வளைந்ததாக தோற்றமளிக்கும். சீக்கிரம் இக்கட்டி பழுத்து உடைந்துவிடும் ஒட்டகத்தின் கழுத்து வளைவுபோல் இவ்வடிவம் உள்ளதால், இவ்விதமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. பரிஷ்ராவி

அதிக அரிப்புடன் ஏற்படும் இத்திரட்சியானது கசிவுள்ள வீக்கமாகவும், அற்ப வேதனையுடனும், வெண்மையான திரட்சி ஆகி, விரைவில் உடையமாட்டாததாகி சீழ் கெட்டியாகி வடிய முடியாததால் கசிந்து கொண்டிருக்கும்.

### 4. சம்பூகாவர்த்தனம்

நிறபேதமுள்ளதாயும், பலவிதமான வேதனைகளையும் வெவ்வேறுவிதமான துர்நீர்க் கசிவுகளைக் கொண்டதாயும், பசுவின் ஸ்தனம் போன்று உருவமுடைய திரட்சியையும் ஏற்பட்டு உடைந்த பின் நந்தையின் சுழிபோன்ற துவாரமுடையதான வெடிப்பும் காணப்படும். இது முத்தோஷங்களும் கோளாறடைந்து சம்பவிப்பதாகும்.

### 5. உந்மார்கி

முள் முதலிய பிற பொருட்கள் இப்பாகத்தைப் பொத்து விடுவதால் உண்டாகும் புண்ணானது முறையான சிகிச்சையினால் குணமாக்காது விடுவதால் கிருமித் தொற்றுண்டாகி, பல துவாரங்களும், துளைகளுமேற்பட்டு ஆபத்தை உண்டுபண்ணுவதாகும்.

### கஷ்டசாத்திய நிலை:

மூல முளைகள் ஏற்பட்டு முறையாகச் சிகிச்சை பெற்றுக் கொள்ளாது விடுவதாலும், ரோகியின் ஒழுங்கற்ற நடவடிக்கைக் கேட்டினாலும் மீண்டும் மீண்டும் ஏற்படும் முளைகளின் அடிப்புறம் வீக்கமும், அரிப்பும், அழற்சியும் வலிப்பும் அதிகமாகி விரைவில் பழுத்து உடைந்துவிடும். இதில் சீழும் துர்நீர்க்கசிவும் ரோகி நடந்து செல்லும் போதெல்லாம் வெளியேறிக் கொண்டேயிருக்கும்.

### அசாத்திய நிலை:

இவ்வாறான ரோகங்களில் ஆரம்பத்திலேயே முறையான சிகிச்சைகளையும் நடைமுறை ஒழுங்குகளையும் ரோகி கடைப்பிடிக்காது போவதாலும், வியாதி நாட்பட்டதாயும், துவாரங்களிலிருந்து கிருமித் தொற்று உண்டாகியும், மலம், அபான வாயு, சிறுநீர் இவை துவாரங்களால் வெளியேறும் நிலைமையும் உண்டானால் ரோகி பிழைப்பது அரிதாகும்.

கிருமித் தொற்றானது குதத்தினுள் இருந்து குடல்வரை பரவி, புரையோடுவதால் மூலப்புற்று என அழகல் தன்மையும் உண்டாகி மரணத்தை விளைவிக்கும்.





# மூலநோய்களுக்கான தேர்ந்த மருந்துகள்

## மாத்திரைகள்

### 1) மூலகுடோரி மாத்திரை (ஏ. வீ. ஆர். முறை)

சுத்திசெய்த பூரம்
சுத்திசெய்த மனோசிலை
சுத்திசெய்த கல்நார்
சுத்திசெய்த தாளகம்
சுத்திசெய்த வெண்காரம்
வகை கிராம் 25

தனித்தனி பொடித்துக் கூட்டி, கொடிக்கள்ளிப் பாலால் அரைத்து, வெயிலில் உலர்த்தி, அகலில் இட்டு சீலை மண் செய்து குக்குட புடமிட்டு எடுத்து,

பசுப்பால்
கள்ளிச்சாறு
பழச்சாறு
கற்றாளஞ் சாறு
கையாந்தகரைச் சாறு

இவற்றால் தனித்தனி அரைத்து, 300 மி. கி. எடையுள்ள மாத்திரைகளாக்கி உலர்த்திப் பத்திரப்படுத்தவும். பசுமோர் அல்லது ஏற்ற அனுபானங்களில் கொடுக்க சகல மூல ரோகமும் தீரும்.

### 2) காங்காயன மாத்திரை (கையெழுத்துப் பிரதி)

திப்பலி
மிளகு
சீரகம் - வகை 20 கிராம்
திப்பலி மூலம்
எவச்சாரம் - வகை 40 கிராம்

கொடிவேலி 80 கிராம்
கடுக்காய்த்தோல் 100 கிராம்
சுக்கு 100 கிராம்
சுத்தி செய்த
சேங்கொட்டை 160 கிராம்
உலந்த கரணைக் கிழங்கு 160 கிராம்

சம்பச் சரக்குகள் யாவற்றையும் சூரணித்துக்கொண்டு எவச்சாரத்தையும் பொடித்துக் கூட்டி எல்லாவற்றின் எடைக்கும் இருமடங்கு வெல்லம் கூட்டி இடித்து 10 கிராம் எடையுள்ள மாத்திரைகளாகப் பத்திரப்படுத்தவும். எல்லா வகையான மூலவியாதிகளையும் குணமாக்குவதுடன் சத்திர சிகிச்சைக்கும் அவசியம் ஏற்படாது.

## சூரண வகைகள்

1. பஞ்ச தீபாக்கினி சூரணம் -
(அகஸ்தியர் ரத்தினச் சுருக்கம்)

திரிகடுகு
ஏலம்
நற்சீரகம் வகை 100 கிராம்
சீனி 500 கிராம்

சரக்குகளை இள வறுப்பாக வறுத்து இடித்து, வஸ்திர காயம் செய்து, சீனியையும் பொடித்துக் கூட்டி பத்திரப்படுத்தவும்.

அளவு: 1-2 கிராம், 2 அல்லது 3 வேளை உணவின் முன் நெய் அல்லது தேனில் உண்ண, பசியின்மை, வயிற்றுவலி, தேக உஷ்ணம், அருவருப்பு நீங்கும். பாசன, தீபன சக்தியை உண்டுபண்ணும்.

2. சிவதைச் சூரணம் (சுதேச வைத்தியத் திரட்டு)

இலவங்கம்
திரிகடுகு





திரிபலை
ஏலம்
சிறுநாகம்பூ,
கோரைக் கிழங்கு - வகை - 10 கிராம்
சிவதை வேர் - 40 கிராம்

சிவதை வேரை பசுப்பாலில் அவித்து உலர்த்தியும், ஏனைய சரக்குகளை இள வறுப்பாக வறுத்துச் சூரணித்தும்கொள்ளவும்.

அளவு: 2 - 4 கிராம் இரு வேளை உணவின் பின் சர்க்கரை அல்லது நெய் அல்லது பால் இவற்றில் கொள்ள எந்தவகையான மலபந்தமும் அபான வாயுவும் உஷ்ணமும் தணியும்.

3. வைச்வானர சூரணம் (ஸஹஸ்ர யோகம்)

இந்துப்பு - 10 கிராம்
ஓமம் - 20 கிராம்
சீரகம் - 30 கிராம்
திப்பலி - 40 கிராம்
சுக்கு - 50 கிராம்
கடுக்காய்த்
தோல் - 150 கிராம்

இந்துப்புத் தவிர்ந்த ஏனைய சரக்குகளை இடித்துச் சூரணமாக்கி இந்துப்பையும் வறுத்துப் பொடித்துக் கலந்து பத்திரப்படுத்தவும்.

அளவு; 1 - 3 கிராம், 2 அல்லது 3 வேளை சுட்டு ஆறிய நீர் அல்லது மோரில் உபயோகிக்க அஜீரணத்தால் ஏற்படும் குடல் கோளாறுகளும், மலச்சிக்கல் பசியின்மை, வயிற்றுப் பொருமல், இரப்பை அழர்ச்சி ஆகியவை தீரும்.

4. அவிபத்திகர சூரணம் (பைஷஜ்ய ரத்னாவளி)

திரிகடுகு
திரிபலை
கோரைக் கிழங்கு

வாய்விடங்கம்
ஏலக்காய்
இலவங்கம்
கறுப்புப்பு - வகை 10 கிராம்
இலவங்கப்பத்திரி - 110 கிராம்
கருஞ்சிவதை - 440 கிராம்
சீனி - 660 கிராம்

சரக்குகளைச் சூரணித்துக்கொண்டு உப்பையும் வறுத்துச் சூரணித்துக் கொண்டு, சீனியையும் தனித்துப் பொடித்துக் கலந்துகொள்ள வேண்டும்.

அளவு ; 5 - 10 கிராம் இருவேளை சுடு நீரில் கொள்ள பித்தம் அதிகரித்த கோளாறுகள், வயிற்றுப் பொருமல், அஜீரணம் மலச்சிக்கலை நீக்கி வழமைக்குக் கொண்டுவரும்.

## 5. கடுக்காய்ச் சூரணம் (ஏட்டுப் பிரதி)

கடுக்காய்த் தோல் 175 கிராம்
மிளகு
சீரகம்
திப்பலி
திப்பலி மூலம் - வகை 35 கிராம்
செவ்வியம் - 105 கிராம்
கொடிவேலி - 140 கிராம்
சுக்கு - 175 கிராம்
சுத்திசெய்த சேங்கொட்டை - 280 கிராம்
காட்டுக்கரணைக் கிழங்கு (உலர்ந்தது) - 280 கிராம்

தக்கபடி சூரணித்துச் சேகரித்து,ஒரு மண்டலம் 5கிராம்வீதம் சர்க்கரை கூட்டிச் சாப்பிட்டு மோரும் அருந்திவர, உள்மூலம், வெளி மூலம் போன்ற சகல மூலரோகங்களும் நீங்கும்.





## 6. பவுந்திரச் சூரணம் (அனுபோக வைத்திய நவநீதம்)

எட்டிமரப் புல்லுருவி
வக்கணாத்திப் பட்டை
வெள்ளறுகு
சங்கம் வேர்ப் பட்டை
நிலாவாரை
கொடிவேலி வேர்ப் பட்டை
மிளகரணை வேர்த்தோல்
சிறுகுறிஞ்சா வேர்ப் பட்டை
நிலக்கடம்பு வேர்ப்பட்டை
முற்றிய வேப்பம் பட்டை - தனித்தனி உலர்த்திய தூள் 35 கிராம்
மிளகு தூள் - 130 கிராம்

யாவற்றையும் ஒன்று கலந்து அம்மியில் நன்கு அரைத்துச் சேர்க்கவும்.

அளவு ; 7 - 10 கிராம் வரை இருவேளை !4 நாள் தேன், நெய், வெண்ணெய் ஏற்ற அனுபானங்களில் உபயோகிக்க பலவித பவுந்திரங்களும், பெருநோய், சூலை, விரணங்கள், கிரந்திகள் ஆகியவையும் நீங்கும்.

பஞ்சபூத செந்தூரம் அல்லது நாகபற்பம் கூட்டி 3 - 5 நாள்வரை உண்டுவர சீக்கிரம் குணமளிக்கும்.

## அரிஷ்டங்கள்

### தக்ரா அரிஷ்டம் (சரகஸம்ஹிதை)

| | |
|---|---|
| கொட்டக்கரந்தை | கருஞ்சீரகம் |
| கொத்தமல்லி | நற்சீரகம் |
| சதகுப்பை | பூலாங்கிழங்கு |
| திப்பலி | திப்பலி மூலம் |

கொடிவேலி யானைத் திப்பலி
ஓமம் குறோசாணி ஓமம்
வகை 25 கிராம்

4 லீற்றர் பசுமோரில் மேற்படி சரக்கைச் சூரணித்துக் கலக்கி, பழகிய நெய்ப்பாண்டத்திலிட்டு, வாய்மூடிச் சீலைமண் செய்து வெட்பதட்ப நிலைக்கேற்ப 20 நாள் முதல் 30 நாள்வரை நன்கு புளித்துக் காரம் கொள்ளும்வரை ஊறவிட்டு எடுத்துக்கொள்ளவும்.

இவ்வரிஷ்டத்தை உணவு உட்கொள்ளுமுன்பும். உணவுடன் சேர்த்தும், உணவு உண்ட பின்பும் நா வரட்சிக்கும் குறைந்த அளவில் (15 மி. லீ.) ஏற்றபடி பருகிவர வாய்க்குச் சுவையும், பசியை விருத்திசெய்தும், தோஷங்களைச் சீர் செய்தும், உடலுக்கு வன்மையையும், குளிர்ச்சியையும் ஏற்படுத்தி, குதத்தில் தோன்றிய வீக்கம். அரிப்பு வேதனைகளும் நீங்கி, மூல முளைகளின் சினப்பையும், வரட்சினையும் நீக்கி சுருங்கி விடச் செய்வதையும் அனுபவத்தில் காணலாம்.

## 1. அபயாரிஷ்டம் (அனுபவமுறை)

கடுக்காய்த் தோல் 4 கிலோ
நெல்லி வற்றல் 8 கிலோ
உலந்த வில்வப் பழத்
தசை 5 கிலோ
வட்டத்திருப்பி வேர் ½ கிலோ
கொடிவேலி வேர் ½ கிலோ
இலுப்பைப் பூ ½ கிலோ

60 லீற்றர் நீரில் ஊறவிட்டு ¼ பங்காக வற்ற வைத்து வடித்தெடுத்துக்கொள்ளவும். இதில் வெல்லம் 10 கிலோ கரைத்துக்கொண்டு,

நெருஞ்சில் சிவதைவேர்
கொத்தமல்லி செவ்வியம்
சதகுப்பை பெருஞ்சீரகம்
வாய்விடங்கம் திப்பலி மூலம்





தந்தி மூலம் இலவம் பிசின் – வகை 100 கிராம்

காட்டாத்திப் பூ – 200 கிராம்

சரக்குகளைப் பொடித்துக்கொண்டு மேற்படி கசாயத்துள் யாவற்றையும் கலந்து, பழகிய மட்பாண்டத்துள் ஊற்றி வாய்க்குச் சீலைமண் செய்து ஒரு மாதத்தின் பின் வடித்துச் சேமிக்கவும்.

இவ்வாறான அரிஷ்டத்தை 15–30 மில்லி சமஅளவு நீர் அல்லது மோர் கலந்து 2 வேளை கொடுக்க சகல விதமான மூலரோகமும் மலச்சிக்கல், வயிறுப் பொருமல், குடல் கிருமிகள், பாண்டு காமாலை, அடிக்கடி மலம் போகும் (கிரகணி) நிலை, சருமரோகம், வெண்குஷ்டம் போன்றவற்றை நீக்கி ஈரலுக்கு ஊட்டத்தையும் இரத்த விருத்தியையும் செய்து, தேக வன்மையையும் கொடுக்கும்.

## 3) தந்தியா அரிஷ்டம் (சரக ஸம்ஹிதை)

நேர்வாள வேர்
கொடிவேலி வேர்ப் பட்டை
தசமூலம்
திரிபலைத் தோல்
வகை 40 கிராம்

ஆக 15 சரக்குகளையும் இடித்து 10.240 லீற்றர் நீரில் ஊறவிட்டு ¼ பங்காக வற்றக் கசாயம் செய்து குளிர்ந்தபின்பு வடித்து 400 கிராம் பழைய வெல்லமும் சேர்த்துக் கரைத்து, பழகிய மட்பாண்டத்தில் 15 நாள் வாய்மூடிச் சீலைமண் செய்து ஊறவிட்டு சேகரித்துக்கொள்ளவும். இம்முறையில் திரிபலைக்குப் பதில் கடுக்காயை மட்டும் சேர்த்தும், 640 கிராம் காட்டாத்திப் பூவைச் சேர்த்தும் ஊறவிட்டுச் செய்வதாக சுச்ருத ஸம்ஹிதை கூறுகின்றது.

சகல விதமான மூலவியாதிகளுக்கும் இரண்டுவேளை சமன் மோர், கலந்து அருந்திவர நல்ல பலன் கிடைக்கும்.

# க்ருதம் (நெய்)

## 1) செவ்யாதிக்ருதம் (சரக ஸம்ஹிதை)

| | |
|---|---|
| செவ்வியம் | திரிகடுகு |
| வட்டத்துத்தி | கொத்தமல்லி |
| ஓமம் | திப்பலி மூலம் |
| கொடிவேலி | கடுக்காய்த் தோல் |
| உலர்ந்த வில்வப்பழத்தசை | யவச்சாரம் |
| பிடாலவணம் | இந்துப்பு |

சம எடை தூரணித்துக்கொண்டு யாவற்றையும் ஒன்றுகூட்டி கெட்டியான புளித்த தயிரினால் விழுதாக அரைத்துக்கொண்டு அந்த எடைக்கு நான்கு மடங்கு பசுநெய்யில் யாவற்றையும் கூட்டிக் காய்ச்சி மத்திய பதத்தில் வடித்தும் பத்திரப்படுத்தவும்.

உபயோகம்:

ஓரிரண்டு தேக்கரண்டி இருவேளை அருந்திவர அபான வாய்வையும், மலத்தையும் கீழ் நோக்கி வெளியேற்றும். குதம் தொடையிடுக்கு வேதனைகள், மூலத்தால் சீதம், இரத்தம் வெளியேறல், குதம் நழுவிப்போதல், நீர்ச்சுருக்கு போன்ற வேதனைகளும், நோயும் நீங்கும்.

## 2) சாங்கேரி க்ருதம் (சரக ஸம்ஹிதை)

| | |
|---|---|
| புளியாரைச் சாறு | 4 லீற்றர் |
| புளித்த கெட்டித்தயிர் | 16 லீற்றர் |
| நெய் | 1 லீற்றர் |
| சுக்கு | திப்பலி மூலம் |
| கொடிவேலி | யானைத் திப்பலி |
| நெருஞ்சில் | திப்பலி |
| கொத்தமல்லி | வில்வப்பழம் |
| வட்டத்துத்தி | ஓமம் —வகை 25 கிராம் |





சரக்குகளைச் தூரணித்து கல்கமாக அரைத்து, புளியாரைச் சாற்றில் கரைத்து நெய்யுடன் கூட்டிக் காய்ச்சி மத்திய பதத்தில் இறக்கி வடிகட்டவும்.

உபயோகம்:

5-10 கிராம் இரண்டுவேளை பாலுடன் உண்டுவர கபம், வாதம் மிகுந்த மூல வியாதியின் உக்கிரம் தணிவடையும். நீர்ச்சுருக்கு, கடுப்பு, வயிற்றுப் பொருமல், குதம் நழுவிப் போதலும், குதத்தில் வலி வேதனையும் நீங்கும்.

# எண்ணெய் வகை

## 1. குளிர்ச்சி எண்ணெய் (ஏட்டுப் பிரதி)

| | |
|---|---|
| முள்ளங்கிக் கிழங்குச் சாறு | மணத்தக்காளிச் சாறு |
| கத்தாளைச் சாறு | வல்லாரைச் சாறு |
| சிறுகீரைச் சாறு | சிற்றாமணக்கு |
| | எண்ணெய்- வகை படி! |

கலந்து காய்ச்சி, மெழுகுப்பதத்தில்வடித்தெடுத்துக்கொண்டு, காலை அல்லது மாலை தினமும் ஒன்றிரண்டு தேக்கரண்டி சாப்பிட்டு வர மூலநோயில் காணும் மலச்சிக்கலைப் போக்கி, அழற்சியையும் கடுப்பு வேதனையையும் போக்கிவிடும்.

## 2 மூல குடாரத் தைலம் (ஏட்டுப் பிரதி)

| | |
|---|---|
| கடுக்காய் தூள் | 500 கிராம் |
| கத்தாளஞ் சாறு | |
| வெங்காயச் சாறு | |
| ஆமணக்கெண்ணெய் | -வகை 1 லீற்றர் |

கடுக்காய்த் தூளைக் கல்கமாக அரைத்து கலந்து சிறுதீயாக எரித்து மெழுகு பதத்தில் வடித்துக்கொண்டு, ஒன்று முதல் 2 தேக்கரண்டி இரவில் சுடு பாலுடன் அருந்திவர இரத்த மூலம், மூலக் கடுப்பு, மலச்சிக்கல்கள் நீங்கும். தேகம் குளிர்ச்சி பெறும்.

## 3. பகந்தரச் சுடர்த்தைலம்

(அனுபோகவைத்திய நவநீதம்)

சுத்திசெய்த ரசம்
சுத்திசெய்த லிங்கம்
சுத்திசெய்த ரசகற்பூரம்
சுத்திசெய்த மனோசிலை
சுத்திசெய்த சாம்பிராணி – வகை 7 கிராம்
நெல்லிக் கெந்தகம் - 14 கிராம்
பசு வெண்ணெய் – 49 கிராம்

இரசம், கெந்தகத்தை முதலில் சேர்த்து நன்கு பொடித்து, பின் படிப் படியாக, மற்றச் சரக்குகளைத் தனித்தனி பொடித்துச் சேர்த்து வெண்ணெய் கூட்டி, மூன்று மணி நேரம் அரைத்து, மெல்லியதுணி யில் தடவி உருட்டி முறைப்படி சுடர்த் தைலம் இறக்கி, பளிங்குக் குப்பியில் சேர்க்கவும்.

உபயோகம்:

உடல் வலிமைக்குத் தக்கபடி மூன்று-ஐந்து துளிகள் சர்க் கரை, வெண்ணெய், பொரியரிசி மாவு ஏதேனும் ஒன்றில் கூட்டி இரண்டுவேளை கொள்ள பலவகையான பவுந்திரங்களும் தீரும். (வெண்ணெய்க்குப் பதில் நெய் கூட்டி அரைத்தும் சுடர்த் தைலம் இறக்குவது உண்டு.)

## லேகிய வகை

### 1) கரணைக் கிழங்கு லேகியம்

(பதார்த்தகுண விளக்கம் கண்ணுச்சாமியம்)

| | |
|---|---|
| காட்டுக் கரணை | கறிக்கரணை |
| சரக்கொன்றைப் புளி | கோரைக் கிழங்கு |
| சித்திரமூல வேர்ப் பட்டை | கடுக்காய்த் தோல் |
| சுக்கு | மாம் பருப்பு |
| பிடிகரணை | குமரிவேர் |
| மருள் கிழங்கு | பிரண்டை |
| புளிநரளை | |

வகை கிராம் 50

| | |
|---|---|
| பனை வெல்லம் | 1300 கிராம் |
| பசு நெய் | 140 கிராம் |

சரக்கொன்றைப் புளி தவிர்ந்த ஏனைய சரக்குகளைச் சூரணித்து வைத்துக்கொள்ளவும். பனை வெல்லத்தை 1லீற்றர் நீரில் கரைத்து பாகு பதமாகக் காய்ச்சிக்கொண்டு அதில் சூரணத்தையும், சரக் கொன்றைப் புளியை நீரில் ஊறவிட்டுக் கரைத்து அதனையும் ஊற் றிச் கிளறி, நெய் சேர்த்துக் கிண்டி லேகிய பதமாகப் பத்திரப் படுத்தவும்.

வேளைக்கு ஒரு தேக்கரண்டி வீதம் இரண்டுவேளை சாப்பிட்டு சுடு நீர் அல்லது பசுமோர் அருந்திவர பத்துத் தினங்களில் எவ்விதமான மூல ரோகமும் தீரும். கை கண்ட அனுபவம்.

### 2. நாரத்தை லேகியம் (ஸஹஸ்ர ஸித்தயோகம்)

| | | |
|---|---|---|
| நாரத்தம் பழச்சாறு | | 1 லீற்றர் |
| இஞ்சிச்சாறு | | ½ லீற்றர் |
| சர்க்கரை | | 1500 கிராம் |
| தேன் | | 140 கிராம் |
| நெய் | | 560 கிராம் |
| இந்துப்பு | ஏலரிசி | |
| இலவங்கப்பட்டை | இலவங்கப் பத்திரி | |
| திரிபலை | திரிகடுகு | |
| | வகை | 70 கிராம் |
| சீரகம் | | 210 கிராம் |

சரக்குகளைச் சூரணித்துக்கொண்டு, இந்துப்பைத் தனித்துப் பொடித்துக் கூட்டிக்கொள்ளவும். நாரத்தம் பழ இரசம், இஞ்சிச் சாறு இவற்றுடன் சர்க்கரைசேர்த்துக் கரைத்து வடித்து. பாகுபத

மாகக் காய்ச்சிக்கொண்டு, அதில் மேற்படி சூரணத்தைப் போட்டுக் கிளறி, நெய்யையும், தேனையும் சேர்த்துக் கிண்டி லேகியமாகப் பத்திரப்படுத்தவும்.

40 நாட்களுக்கு இருவேளை ஒரு தேக்கரண்டி வீதம் சாப்பிட்டு வர மலச்சிக்கல் காரணமாய் ஏற்பட்ட மூலவியாதிகளும், பித்தம் அதிகரித்த மூல வியாதியிலும் வாந்தி, இரைப்பை அழற்சி, இரைப்பைப் புண், வெப்பம், மயக்கம், தலைச்சுற்று போன்ற உபத்திரவங்களும் நீங்கும்.

## 3. தேத்தாங்கொட்டை லேகியம்

(அகஸ்தியர் பரிபூரணம் 400)

| | |
|---|---|
| தேத்தாங்கொட்டை | 150 கிராம் |
| சீரகம் | |
| சித்தரத்தை | |
| திரிகடுகு | |
| திரிபலை | – வகை 15 கிராம் |
| சர்க்கரை | – 125 கிராம் |
| பசும்பால் | – 2 லீற்றர் |
| பசுநெய் | – 500 மில்லி |
| தேன் | – 250 மில்லி |

தேத்தாங்கொட்டையை வறுத்தும், எனைய சரக்குகளை உலத்தியும் இடித்துச் சூரணித்துக்கொள்ளவும். பசுப்பாலில் சர்க்கரையைக் கரைத்து வடித்து, பாகு பதமாக்கி, அதில் சூரணத்தைச் சிறுகச் சிறுகச் சேர்த்து நெய்யும் கூட்டி கிண்டி இறக்கியபின் தேனும் கூட்டிப் பக்குவப்படுத்தவும்.

அரைத் தேக்கரண்டி வீதம் 2 வேளை நாற்பது நாள் தொடர்ந்து உட்கொள்ள எல்லா வகையான மூலரோகமும், பகந்தரம், உடல் தாதுகள் வலுவிழத்து போதல் தேகச் சூடு ஆகியவை நீங்கும்.

100-200 மி. கி. நாகபற்பம் கூட்டி 2 வேளை 3 நாள் கொள்ள இரத்தமூலம், பவுந்திரத்திரட்சி உடன் குணமாகும். (அனுபவமானது)





## 4. வெட்பாலை ரசாயனம் (அனுபவ வைத்தியம்)

| | |
|---|---|
| வெட்பாலையரிசி | பெருங்குரும்பை |
| கண்டுபாரங்கி | கடகரோகணி |
| மிளகு | அதிவிடயம் |
| கள்ளி (உலர்ந்தது) | ஏலக்காய் |
| பாடகக் கிழங்கு | வெண்கடுகு |
| வாய்விடங்கம் | செவ்வியம் |
| கொடிவேலி | மாயாக்காய் |
| பூனைக்காலி வேர் | |
| வகை கிராம் 10 | |
| வெட்பாலைப் பட்டை | 1500 கிராம் |
| தேன் | 150 கிராம் |

2 லீற்றர் நீரில் வெட்பாலைப் பட்டையை ஒரு நாள் ஊறவிட்டு நான்கில் ஒன்றாக வற்றக் கஷாயம் செய்துகொண்டு மேற்படி சரக்குகளைச் சூரணித்துக் கலந்து காய்ச்சி இறக்கிய பின் தேனையும் கூட்டி பத்திரப்படுத்தவும்.

தினமும் 2 வேளை ஒரு தேக்கரண்டி உணவின் முன் மோருடன் சாப்பிட்டு வர. இரத்தம் வெளியேறும் மூல வியாதிகளுக்கும் ஏனைய வேதனை மிக்க மூல ரோகங்களுக்கும் நல்ல பயனைத் தரும்.

## 5. மூல நிவாரண லேகியம்

(சிகிச்சாரத்தினதீபம் 2-ம்பாகம்)

| | | |
|---|---|---|
| | தென்னம்பூச்சாறு | ½ படி |
| அ) | மாதளம் பழத்தோல் | மருள் கிழங்கு |
| | காட்டுக்கரணை | கறிக்கரணை |
| | செங்கத்தாரிப் பட்டை | ஆவரசம் பட்டை |
| | ஆவாரை வித்து | புளியங்கொட்டைத் தோல் |
| | வகை 40 கிராம் | |

| | |
|---|---|
| ஆ) ஏலம் | லவங்கப் பட்டை |
| சாதிபத்திரி | கராம்பு |
| சாதிக்காய் | |

வகை கிராம் 40

| | |
|---|---|
| இ) மிளகு | அதிமதுரம் |
| கோட்டம் | வசம்பு |
| சீரகம் | விளாம் பிசின் |
| காசுக்கட்டி | வால்மிளகு |

வகை கிராம் 20

அ - அங்கத்தில் கூறப்பட்ட சரக்குகளைச் சூரணித்து, தென்னம்பூச் சாற்றால் அரைத்துச் சேகரிக்கவும். ஆ - அங்கத்தில் கூறப்பட்ட சரக்குகளைச் சூரணித்து பசுவின் பாலில் அரைத்துச் சேகரிக்கவும். இ - அங்கத்தில் கூறப்பட்ட சரக்குகளைச் சூரணித்துக்கொண்டு 500 மில்லி பசும்பாலில் 1250 கிராம் சர்க்கரையைக் கரைத்து வடி கட்டிப் பாகுபதமாக்கி, முன் இரு அங்கங்களிலும் சித்தப்படுத்திய கல்கங்களையும் சேர்த்துக் கிண்டி இறுகிவரும்போது, இ - அங்கத்தின் சூரணத்தையும் சேர்த்துக் கிண்டி $\frac{3}{4}$ லீற்றர் நெய்யும், $\frac{1}{4}$ லீற்றர் தேனும் சேர்த்து லேகிய பதமாகப் பத்திரப்படுத்தவும்.

7 நாள் இரண்டு வேளை ஒரு தேக்கரண்டி வீதம் சாப்பிட்டுவர, இரத்தமூலம், சீழ் மூலம், ஆசனக் கடுப்பு, குத நெகிழ்வு இவை நீங்கும்

## 6. காராமை லேகியம் (சிகிச்சா ரத்தின தீபம்-2ம்பாகம்)

கறுப்பு நிற ஒட்டினை உடைய ஆமையை, இரத்தம் வெளியேறாதவாறு ஒட்டுடன் அவித்துப்பின் ஒடு, குடல் முதலியவற்றை நீக்கி சுத்தம் செய்த மாமிசம் - 200 கிராம்

| | |
|---|---|
| ஏலம் | லவங்கப் பட்டை |
| கிராம்பூ | பெருஞ்சீரகம் |
| மல்லி | சாதிக்காய் |
| வசுவாசி | மஞ்சள் |

வகை 10 கிராம்





| | |
|---|---|
| கல்லாக்காரம் | 100 கிராம் |
| பால் | 500 கிராம் |

மாமிசத்தையும், வெங்காயத்தையும் அம்மியிலிட்டு வெண்ணெய் போல் அரைத்துச் சட்டியிலிட்டுப் போதுமான அளவு நெய் விட்டுக் கிண்டி, வெந்து, குழைந்து, வரும் பதத்தில் மேற்படி சூரணத்தைப் போட்டுக் கிண்டி, ஆறவிட்டுப் பத்திரப்படுத்தவும்.

இரண்டு வேளை 5 கிராம் வீதம் சாப்பிட்டு வர, இரத்த மூலம், உள் மூலம், குதநெகிழ்ச்சி நீங்கி, தேகம் குளிர்ச்சியாகி வன்மை பெறும். (இதே முறையில் ஆமையின் மாமிசத்திற்குப் பதில் நத்தை மாமிசத்தைச் சேர்ப்பதுவும் ஓர் முறையாகும்)

## 7. அஜ மாமிச ரசாயனம் (சரபேந்திர வைத்திய முறை)

| | |
|---|---|
| கரணைக் கிழங்கு | 400 கிராம் |
| வெள்ளாட்டுக்குட்டி மாமிசம் | 400 கிராம் |
| மிளகுப் பொடி | 10 கிராம் |
| பூண்டு | 20 கிராம் |

கரணைக் கிழங்கையும் மாமிசத்தையும் நறுக்கி வேகவைத்து, மிளகுப்பொடி, பூண்டு சேர்த்து யாவற்றையும் அரைத்து பின் நல்லெண்ணெய் போதுமான அளவு விட்டு மெழுகாகக் கிண்டி இறக்கவும். இரண்டு வேளை உட்கொண்டுவர மூலக் கரப்புகள் நீங்கும்.

## 8. சிவதை லேகியம் (அனுபவக் கைப்பிரதி)

| | |
|---|---|
| சிவதை வேர் | வாலுழுவை |
| கரணைக்கிழங்கு | கொடிவேலி வேர் |
| வகை | 25 கிராம் |
| லவங்கப் பட்டை | ஏலக்காய் |
| மிளகு | யானைத்திப்பலி |

75 கிராம்

| | |
|---|---|
| சர்க்கரை | 1250 கிராம் |

மேற்படி சரக்கைச் சூரணித்துக்கொண்டு, சர்க்கரையைக் கரைத்துப் பாணி காய்ச்சி பாகுப் பதத்தில் சூரணத்தையும் சேர்த்துப்

போதுமானளவு நெய் கூட்டி இறக்கியபின் தேனும் கூட்டிப் பத்திரப் படுத்தவும்.

இருபது நாள் தொடர்ந்து 2 வேளை பசும்பாலுடன் ஒவ்வொருதேக்கரண்டி சாப்பிட்டு வர மூலக்கோளாறுகள் யாவும் முற்றிலும் நீங்கி விடும்.

## 9. கௌசிகர் குழம்பு (சித்த வைத்தியத் திரட்டு)

| | |
|---|---|
| கடுக்காய்த் தோல் | கடுகு |
| இந்துப்பு | பெருங்காயம் |
| பொரித்த வெங்காயம் | சுத்திசெய்த ரசம் |
| சுத்திசெய்த மனோசிலை | திப்பலி |
| சுத்திசெய்த அரிதாரம் | சீரகம் |
| கடகரோகணி | நாபி (சுத்திசெய்தது) |
| சுத்திசெய்த நேர்வாளம் | |

வகை கிராம் 10

வெல்லம் 50 கிராம் சிரட்டைக் கரி 50 கிராம்

அரைப்பு – உத்தாமணிச் சாறு
கெட்டித் தேங்காய்ப் பால்

சம்பச் சரக்குகளைச் சூரணித்தும், ஏனைய கற்சரக்குகளை ஒவ்வொன்றாக கல்வத்தில் இட்டு, பொடித்து ஒன்றாய்க் கூட்டி அரைத்துக் கொண்டு, வாளத்தை இள வறுப்பாக வறுத்து நன்கு அரைத்துக்கொண்டு பின் யாவற்றையும் ஒன்று கூட்டி முறைப்படி சாற்றாலும், பாலாலும் அரைத்து, இறுதியில், சிரட்டைக் கரித்தூளும் வெல்லமும் கூட்டி நன்கு மெழுகாக அரைத்து பத்திரப்படுத்தவும்.

100-200 மி. கிராம் ஏற்ற அனுபானங்களில் நோயாளியின் வன்மைக்கும் காலத்திற்கும் ஏற்றவாறு கொடுக்கவும்.

இரத்த மூலம், சீழ் மூலம், புற்று, குஷ்டம், சூலை, விஷக்கடி, இவற்றிற்கு உத்தமாகாணிச் சாற்றிலும்; சுரம் சன்னிக்குச் சுடு நீரிலும், ஈளை இருமலுக்குக் கடுக்காய்க் கசாயத்திலும், குளிர்சுரத்திற்கு சுக்குக்கஷாயத்திலும், உட்சுரத்திற்குச் சீரகக் கசாயத்திலும், சன்னிக்கு கொன்றல் இலைச் சாற்றிலும் கொடுக்க குணமாகும்.





## 10. நந்தி மெழுகு (ஸஹஸ்ர ஸித்த யோகம் 1-ம் பாகம்)

| | |
|---|---|
| சுத்திசெய்த சேங்கொட்டை | 1000 கிராம் |
| சுத்திசெய்த எட்டிக் கொட்டை | 315 கிராம் |
| பசுநெய் | 1400 கிராம் |

மேற்படி இரண்டையும் சுத்திசெய்து உலர்த்தி, நறுக்கி, நெய்விட்டு வறுத்து, கொட்டைகளின் எண்ணெயை நெய்யில் பிரிந்து கொட்டைகள் மிதக்கும்போது அவற்றை நீக்கிவிட்டு அந்நெய்யைச் சேகரித்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| படிகாரம் | 1120 கிராம் | |
| பனைவெல்லம் | 2240 கிராம் | |
| தேன் | 1400 கிராம் | |
| பொன் நிமிளைப்பற்பம் | | கல்நார்ப் பற்பம் |
| கல்மதப் பற்பம் | | நண்டுக்கல் பற்பம் |
| பச்சைக் கற்பூரம் | | குங்குமப்பூ |
| கோரோசனை | | |
| | வகை 53 கிராம் | |
| இரசசெந்தூரம் | 140 கிராம் | |

**சம்பச் சரக்குகள்:**

| | |
|---|---|
| திரிகடுகு | ஏலரிசி |
| சிறு தேக்கு | தாளிசபத்திரி |
| குரோசாணி ஓமம் | வாய்விடங்கம் |
| அதிவிடயம் | சாதிக்காய் |
| சாதிபத்திரி | இரு சீரகம் |
| இலவங்கம் | செவ்வியம் |
| காட்டு மிளகு | சித்திரமூலம் |
| திப்பலி மூலம் | கசகசா |

| | |
|---|---|
| சோம்பு | சித்தரத்தை |
| சடா மாஞ்சில் | அக்கரா காரம் |
| நாட்டமுக்கிராய் | நேர்வாளம் (சுத்திசெய்தது) |

வகை 35 கிராம்

| | |
|---|---|
| சுத்திசெய்த ரச செந்தூரம் | சுத்திசெய்த மயில்துத்தம் |
| சுத்திசெய்த பூ நீறு | சுத்திசெய்த பால்துத்தம் |
| சுத்திசெய்த ரசம் | சுத்திசெய்த பூரம் |
| சுத்திசெய்த லிங்கம் | சுத்திசெய்த மனோசிலை |
| சுத்திசெய்த கந்தகம் | சுத்திசெய்தகுதிரைப் பல் பாசாணம் |
| சுத்திசெய்த வெள்ளைப்பாசாணம் | சுத்திசெய்த கௌரிபாசாணம் |
| சுத்திசெய்த லிங்கம் | |

வகை 25 கிராம்

சம்பச் சரக்குகளைத் தனித்துப் பொடித்துக்கொண்டு, ஏனைய ரசம், கந்தகம் போன்றவற்றை முறைப்படி ஒவ்வொன்றாகக் கூட்டிப்பொடித்து அவுரியிலைச் சாற்றினால் 6 மணி நேரம் அரைத்து, வில்லை தட்டி நிழலுலர்த்தி அவுரியிலைக் கல்கத்தினுள் வில்லைகளை வைத்து சாணியால் கவசம்செய்து உலர்த்தி இலகு புடம் இட்டுச் சேகரிக்கவும். பின் பனை வெல்லத்தைப் பாகுகாச்சி, தக்க பதம் வரும்போது, புடமிட்டுப் பொடித்த பாசாணங்களையும், பற்பங்களையும், படிகாரத்தூளையும் ஒன்றுபடச் சூரணத்துடன் நன்கு கலந்து பாகோடு சேர்த்துச் சிறிது சிறிதாய்க் கிண்டும் போது முன் சித்தப்படுத்திய நெய்யையும் சேர்த்து தேனையும் சேர்த்து மெழுகு பதத்தில் இறக்கி, கோரோசனை, குங்குமப் பூ பச்சைக் கற்பூரம் மூன்றையும் பொடித்துக் கலந்து பத்திரப்படுத்தவும்.

**உபயோகம்:** நாட்பட்ட மூலரோகம், பகந்தரம், சரும வியாதிகள் புற்று, பிளவை, அரையாப்பு, விப்புருதி என்னும் கட்டிகள், கண்டமாலை, விஷ நீர்க் கரப்பான், மேகரோகம் 20, குட்டரோகம் 18, எலி, வண்டு போன்ற விஷக்கடிகள், பாரிச வாதம், வாத





ரோகங்கள் போன்ற மிகக் கடுமையான நாட்டப்பட்ட நோய் நிலைகளில் நோயாளியின் உடல் வன்மையையும், கால நிலையையும் கவனத்திற் கொண்டு வைத்தியன் மிக அவதானத்துடன் இம்மருந்தைக் கொடுக்க வேண்டும். 200 – 500 மில்லி கிராம் வரை சம எடை பனை வெல்லமும் கலந்து 12, 25, 37, 45 நாட்களுக்கு உபயோகப்படுத்தத் தீர்மானிக்க வேண்டும்.

## பற்பங்கள்

### 1) ஆமையோட்டுப் பற்பம் (அனுபவ முறைகள்)

450 கிராம் ஆமையோடுகளை சுண்ணாம்பு, பூநீறு சமன் கலந்து கரைத்துத் தெளிந்த நீரில் வற்றும் வரை எரித்தெடுத்து, சுத்தமாகக்கழுவி எடுத்தபின் ஆடாதோடை இலைச்சாற்றினாலும் வட்டத்துத்தி இலைச் சாற்றினாலும் தனித்தனி அரைத்து வில்லை தட்டி உலர்த்தி, அகலில் இட்டுச் சீலை மண்செய்து 100 விறாட்டியில் புடமிட்டு எடுக்கவும்.

100-200 மில்லி கிராம் பற்பத்தை எடுத்து, தேன், நெய் போன்ற ஏற்ற அனுபானத்தில் இரண்டுவேளையும் உட்கொண்டு வர மாந்தம், வயிற்றுப் பொருமல், மூலக் கடுப்பு, மூலவாய்வு, மூலக் கசிவுகளும் நீங்கிவிடும்.

### 2. நத்தை பற்பம்(அனுபவ முறை)

சிறிய பானை ஒன்றிற்குள் அடியில் அரைப்பங்கிற்கு துத்தி இலைகளைப் பொதிந்து, அதற்குமேல் சுத்தமாகக் கழுவியெடுத்த வெண் நத்தை ஓடுகளைப் போட்டு, அதன்மேலும் துத்தி இலைகளைப் பொதிந்து வாய்மூடிச் சீலை செய்து 50 அல்லது 60 விராட்டிகளில் புடமிட்டு எடுக்க பற்பமாகும்.

100-200 மில்லி கிராம் பற்பத்தை வெண்ணெய் அல்லது நெய்யில் இருவேளை சாப்பிட்டு வர எல்லாவிதமான மூலக்கடுப்புக்களும்

இரத்தம் சீறிவரும் இரத்த மூலரோகத்திலும் சீத இரத்த பேதியிலும் நல்ல பலனளிக்கின்றது.

### 3) நாக பற்பம் (ரசரத்ன சமுஜ்ஜியம்)

சிறுகண் நாகத்தை கம்மாலை உலையில் வைத்து உருக்கி இலுப்பெண்ணையில் 7 தடவை சாய்க்க சுத்தமாகும். சுத்தியான நாகத்தை அடிகனத்த சட்டியிலிட்டு உருகும்போது, கையாந்த கரைச்சாற்றால் சுருக்குக் கொடுத்து நாகம் பொடியாகும்வரை வறுத்து எடுத்து, பின் கற்றாளைச் சாற்றால் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி, அகலில் இட்டுப் புடமிட்டு எடுக்கவும். அதன் பச்சை நிறம் மாறி உயர்ந்த பற்பமாகும்வரை மீண்டும் மீண்டும் அரைத்துப் புடமிடவும்.

160 – 200 மி.கி. பற்பத்தை எடுத்து வெண்ணெய், அல்லது நெய் அல்லது தேத்தாங் கொட்டை லேகியத்திலும் பொதிந்து கொடுக்க கடுமையான மூலநோய், பவுந்திரம், இரத்தம் துர்நீர்க் கசிவு மிக்க நாள்பட்ட மூலரோகத்திலும், கிருமித் தொற்றை நீக்கி குணமளிக்கின்றது,

## வெளிப்பிரயோக பூச்சு மருந்துகள்

### 1) அமிர்த வெண்ணெய்

[அகஸ்தியர் வைத்திய காவியம்]

வீரம் 500 கிராமை மினுக்கம் போக அரைத்து பச்சை வெண்ணை சிறிது சிறிதாகக் கூட்டி போதுமான அளவு சேர்த்து ஆறு மணி நேரம் அரைத்து குளிர்ந்த நீரில் வழித்துவிட்டு 7 தடவை அந்நீரை மாற்றி மாற்றி, பிசைந்து கழுவி, வெண்ணெயைப் பத்திரப்படுத்தவும்.

மூல அழற்சி, வீக்கம், கட்டிகள், பவுந்திரம், போன்றவற்றிற்கு வெளிப்பிரயோகமாக உபயோகிக்கவும்.





### 2) துவர்க் களிம்பு

[அனுபவ முறை]

கடுக்காய்த் தோல், நெல்லிவற்றல்
தான்றிக்காய் தோல் காசுக்கட்டி
மாயாக்காய்

சமன் சூரணித்து, அரைத்து பசுநெய் அல்லது தேங்காயெண்ணெய் கூட்டி களிம்புபோல் அரைத்துச் சேகரிக்கவும். நாட்பட்ட ஆறாத இரணங்கள், இரத்தக் கசிவுகள், மூல அழற்சி நீங்கிவிடும்.

### 3] மூலமுளைக்கு குப்பித் தைலம்

[எழுத்துப் பிரதி]

| | |
|---|---|
| பரசம் வித்து | 40 கிராம் |
| வீரம் | 12 கிராம் |
| கோரோசனை | 4 கிராம் |
| முட்டை மஞ்சள் கரு | 10 எண்ணிக்கை |

பரசம் வித்தைச் சூரணித்துக்கொண்டு வீரத்தைக் கல்வத்தில் இட்டு நன்கு அரைத்துக் கொண்டு, கோரோசனையையும் கூட்டிப் பொடிசெய்து சூரணத்தையும் கூட்டி, முட்டை மஞ்சள் கருவால் இரண்டு மணி நேரம் அரைத்து மெழுகு பதத்தில் குன்றிமணி அளவு மாத்திரை செய்து ஒரு மணி நேரம் உலரவைத்து 7 சீலை மண் செய்த கறுப்புக் குப்பிப் போத்தலுக்குள் போட்டு, வாய்க்குக் கம்பி செருகி குப்பித் தைல முறையில் இறக்கிச் சேகரிக்கவும்.

வேகனையுள்ள வெளிமூல முளைக்கு இராக்காலத்தில் இத் தைலத்தை 9 அல்லது 14 நாட்களுக்குப் பூசிவர முளைகள் நீங்கி உபாதைகள் அற்றுவிடும்.

### 4) மகா பவுந்திர தைலம்

(அனுபோக வைத்திய நவநீதம்)

1. ஆமணக்கெண்ணெய் 350 கிராம்
ஆடுதின்னாப்பாலை இலை

காட்டாமணக்கு இலை
சிறுசின்னி இலை
அவுரியிலை
சங்கங்குப்பி இலை
கருவேலம்பட்டை –தனித்தனிச்சாறு வகை 70 கிராம்
புங்கம் பால்
ஆலம்பால் - வகை 140 கிராம்

2. சுத்திசெய்த சாதிலிங்கம்
சுத்திசெய்த மிருதார சிங்கி
சுத்திசெய்த அரிதாரம்
சுத்திசெய்த நெல்லிக் கெந்தகம்
சுத்திசெய்த சீனாக்காரம்
சுத்திசெய்த மடல் துத்தம்
சுத்திசெய்த துருசு - வகை 10½ கிராம்
கார்புகா அரிசித் தூள்
கருஞ்சிவதைத் தூள்
வசம்புத் தூள்
வேப்பம்பட்டைத் தூள்
கொடுக்காப்புளி வேர்ப் பட்டைத்தூள்
சித்திரமூல வேர்ப் பட்டைகள் - வகை 10½ கிராம்
வெள்ளைக் குங்குலியத் தூள் - 17 கிராம்

1–ம் பகுதியிலுள்ள யாவற்றையும் ஒன்றுகலந்து அடுப்பேற்றிக் கொண்டு, 2–ம் பகுதியிலுள்ள கற்சரக்குகளைத் தனித்தனி சரக்குகளின், தூளுடன் கலந்து இரண்டு மணி நேரம் கல்வத்தில் அரைத்து கொதிக்கும் எண்ணெய்க் கலவையில் சிறிது சிறிதாகத் தூவிக் கிளறிச் சிறு தீயாய் எரித்து மர அகப்பையால் துளாவிக் கொண்டு கடுகு பதத்தில் இறக்கி பத்திரப்படுத்தவும்

## உபயோகம்:

பவுந்திரங்கள், பகந்தர ரணங்கள் விப்புருதிப் புண்கள், வெடித்துத் துர் நீர் கசியும் விரணங்கள் யாவற்றிற்கும் மெல்லிய





துணியில் நனைத்துப் போட்டுவர, கிருமித்தொற்று நீங்கி விரைவில் ஆறிவிடும்.


## கோரக்கர் களிம்பு:

| | |
|---|---|
| கஞ்சா | – 30 கிராம் |
| துத்தம் | – 10 கிராம் |
| துருசு | – 10 கிராம் |
| அரிதாரம் | – 10 கிராம் |
| மிருதாரசிங்கி | – 10 கிராம் |
| நிமிளை | – 10 கிராம் |

கல்வத்திலிட்டு. நன்கு பொடித்து நல்லெண்ணெய் அல்லது வெண்ணெயில் அரைத்து, தண்ணீரில் ஏழுதடவை கழுவி எடுத்து, மூலமுளைகள், பவுந்திரம், பிளவை, தொடை வாளை, லிங்கப்புற்று, கடி விஷங்கள், மற்றும் கிரந்திப்படை ஆகியவற்றிற்கு வெளிப்பூச்சாகப் பூசிவர குணமாகும்.

# என் அனுபவ விளக்கமும் நவீன மருந்துகளின் உபயோகமும்

மருத்துவ சேவையின் ஆரம்ப காலங்களில், மூலநோயாளிகளின் துயரமே பெரிதாக என் மனதிற்குப் பட்டது. அவர்கள் துயர்களையப் பெரிதும் அவாவுற்றேன். அதனால் பல நூல்களைத் தேடினேன். உடனடி நிவாரணிகளையும், மீண்டும் உபாதை செய்யாத தற்காப்பு நடைமுறைகளையும், மருந்துகளையும் ஆராய்ந்து வரலானேன்.




குதத்தின் நெடுவெட்டுத் தோற்றம்

1. நேர்குடலின் இறுதிப்பாகம்
2. உள் மூலமுளைகள்
3. உள் நேர்குடல் முடிச்சு
4. வெளி மூலமுளைகள்
5. மூல வெடிப்புக்கள்
6. குதத்தின் இறுதிப்பாகம்
7. வெளி நேர்குடல் முடிச்சு





1973-ம் ஆண்டிலிருந்து எனது ஆய்வுச் சிகிச்சைகளை வட பகுதியில் வாழும் மக்கள் மத்தியில் ஆரம்பித்து 1976லிருந்து இலங்கையின் பல்வேறு இடங்களிலும் உள்ள பல தரப்பட்ட மூல நோயாளிகளுக்கு 1987 வரையிலும் அதன்பின் மீண்டும் இற்றைவரை வட பகுதியில் வாழும் மக்களுக்கும் எனது சிகிச்சை முறைகளினாலும், நடைமுறை ஆலோசனைகளினாலும் மீண்டும் இந்நோய் ஏற்படாமல் செய்வதில் குறிப்பிடத் தக்களவு வெற்றிகண்டு மகிழ்ந்தேன்.

எனது ஆலோசனைகளுக்கும், சிகிச்சைமுறைகளுக்கும் ஒத்துழைப்புத் தந்த நோயாளிகளுள் நூற்றுக்கு எழுபது வீதமானோரில் பலனும் குணமும் கிடைத்தது. இவ்வாறாக நான் மேற்கொண்ட மூலநோய்களைப் பற்றி ஆராய்ந்ததில், பல்வேறு நூல்களிலும் பல வகைகளாக இந்நோய் பற்றி விவரிக்கப்பட்டிருந்தபோதும் அவ்வகைகளின் வடிவங்களையும், தன்மைகளையம் உய்த்துணரும் நுண்ணறிவு எனக்கு இல்லையென்பதால் நான் அனுபவத்தில் கண்ட நோய்களை 9 வகையாக வகைப்படுத்திக் கொள்ள முடிந்தது.

1. புற மூலநோய் -E xternal Piles
2. உள் மூலநோய் - Internal Piles
3. குருதிவெளியேறாத நிலை – Non bleeding Piles
4. குருதிவெளியேறும் நிலை – Bieeding Piles
5. குதநெகிழ்ச்சி – Prolapse of the Rectum
6. மூலக் கரப்பன் – Ano -rectal pruritus
7. மூலவெடிப்புக்கள் – Anal Fissure
8. கிருமி மூலநோய் – Worm Piles
9. மூலப் பகந்தரம் – fistula - in - Ano

## 1. புற மூலநோய் (External Piles)

உபத்திரவம்: தொடையிடுக்குகள், சிறுநீர்த் துவாரம், இவற்றின் நரம்புகளைச் சுண்டியிழுப்பதுபோன்ற வேதனையும், உடலில் கனதியும், மலம் கழிக்கமுடியாது பிழுக்கைபோல் உதிர்வ.

தாயும், தலையிடியும், உணவில் வெறுப்பும், உட்காரவோ நடக்கவோ, மலம்கழிக்கவோ இயலாது, நித்திரையும், அமைதியுமற்று வருந்துவதாகக் கூறினர்.

பரிசோதனை:

குதவாயைச் சுற்றிலும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முளைகள் காணப்படுகிறது. சிறு பயறவு திரட்சி கண்ட ஆரம்ப நிலைகளும், குறுகிய நீளமுள்ள முளைகளாய் ஒன்றுக்கு மேற்பட்டும் இருந்தது. முளைகளில் கொடுதல் உணர்வு பொறுக்க மாட்டாமல் வேதனைப்படுவார்கள். மூலத்தின் உள் (Per Rectal examination) பரிசோதனையில், குதத்துவாரம் சிறுத்தும், குத உட்சுவர்களின் சீதச் சவ்வு அழற்சி அடைந்து சிதைந்தும் காணப்பட்டன.

## 2. உள்மூலம் (Internal Piles)

உபத்திரவம்: குதத்துள் மலம் அடைத்திருப்பதுபோல் உணர்வும், குடல் இரைந்து, மூலத் துவாரத்தைப் பிரித்துக்கொண்டு, சூடான புகைபோல், எரிவான அபான வாயு வெளியேறுவதால் துயரப்படுவதாயும், அபான வாயு வெளியேறும், துன்பத்துக்குப் பயந்து அடக்கும்போது, குடல் இரைந்து தொப்புள் சுண்டி இழுப்பதுபோல் வலியும், வயிற்றில் பொருமலும், நாரிச் சந்துக்களில் வேதனையும் மூச்சுக் கஷ்டமும், தலைச்சுற்றலும் ஏற்படுவதாகக் கூறினர். ஏப்பம் விடுகையில் மூச்சுக் கஷ்டமும், முட்டும் குறைவதாகக் கூறினர்.

பரிசோதனை:

குதப் பகுதித் துவாரம் இறுகச் சுருங்கியதாயும், குதத்தின் வெளிப்புறம் மிகச்சூடாயும் காணப்பட்டது. உள்முகமாகப் பரீட்சிக்கும்போது (PR) மிகுந்த எரிவை உணர்வதாக நோயாளி வருந்துவான். குதத்தின் உட்சுவர் வரட்சியால் சீதப்படிவம் மிக அற்பமாய் வாய்வு வெளியேறிய வேளையில் சிறிது இரத்தம் பொசிவதாய்க் காணப்பட்டது.





## 3. குருதி வெளியேறாத மூலநோய் (Non-bleeding Piles)

உபத்திரவம்: மூலத்தில் முளைகள் இருப்பினும் இரத்தம் வெளியேறாது என்றும், மலம் சொற்பமாய் வெளியேறுவதாயும் மலம் கழிக்கவேண்டியதுபோல் உணர்வும், சிறுநீர் மிக அற்பமாக அடிக்கடி எரிவுடன் போவதாயும், மிகுந்த தாகமும், மயக்கமும் வருவதாகவும், பெருமூச்சு விடும்போதெல்லாம் மூலத்தின் முளைகள் விம்மி வேதிப்பதாயம் தொப்புள், தொடை இடுக்கு எல்லாம் அவ்வேளை வேதனை தருவதாயும், இந்நிலை வருடங்களுக்கு ஒருதடவை ஏற்பட்டுப் பின் அடிக்கடி உபத்திரவம் தரத் தொடங்கியதாயும், தற்காலிக முறைகளில் சாந்தியடைவதாயும், கூறுகின்றனார்.

பரிசோதனை:

முளைகள் மிகச் சிறியதாயும், கடினமாயும் குதவாசலில் காணப்பட்டது. சிலருக்கு ஒன்றுக்கு மேற்பட்டும் இருந்தது. குதத்தின் உட்புறம் பரிசோதிக்கையில் (PR) குதச்சுவர்கள் நெருக்கிச் சுருங்கியும், அழர்ச்யடைந்தும் இருந்தது.

சிலருக்குக் குதத்தின் வெளிப்புறம் முளைகள் அற்றதாயும், ஆனால், மூலத்தில் வேதனையும், சிறுநீர்க் கடுப்பும் அபான வாயு எரிவுபோல் வேதனையுடன் வெளியேறுவதாயும், பிழுக்கையாக மலம் சிறிது வெளிவருவதாயும் கூறினர்.

அவர்களது குதத்தின் வெளிப்பகுதி மிகுந்த சூடாகவும், தொடுதலைப் பொறுக்க மாட்டாதவர்களாகவும் வருந்தினர். குதத்தின் உட்சுவர் வீக்கமாயும், தாபிதடைந்தும் நோயாளி மிகுந்த துயரத்துக்குள்ளாவார், இந்நிலையும், வெகுகாலத்துக்கு ஒரு முறை வந்து தணிவடைந்து பின் அடிக்கடி உபத்திரவம் தரத்தொடங்கியதாயும் கூறினர்.

## 4. குருதி வெளியேறும் மூலநோய் (Bleeding Piles)

உபத்திரவம்: ஆண்டுக்கு ஒரு தடவையாகி, பின் மாதங்களுக்கு ஒரு தடவையாக வருத்துவதாயும், மூலத்தின் வெளிப்பகுதி கனத்தும் ஊருவதுபோன்ற நமைச்சலும் உணர்ந்ததாகவும் சில

சமயங்களில் படிப்படியாக அவ்விடத்தில் வேதனையும், தேள் கொட்டியது போன்ற கடுப்பையும் உணர்ந்ததாயும், அவ்வேளைகளில் சிறிய முளைகள் கூரிய முகமாய் ஆரம்பித்து, விரைவாகத் தீவிரமடைந்து பருத்து, முளைகள் வேர்களைப்போல் நீண்டு இருக்கவும், நடக்கவும் உறங்கவும் முடியாது வேதனை அடைந்து, இரண்டொரு தினங்களுள் குருதி வெளியேறியதும் தணிந்து விடுவதாயும் கூறினர். இதில் ஆரம்பத்தில் ஒரு முளை ஏற்பட்டு, நாளடைவில் பல முளைகளுடன் நோய் வளர்ச்சியடைந்திருக்கும்.

*பரிசோதனை:*

மூலத்தின் வெளிப்பகுதி இரத்தம் வெளியேற முன்பு நீண்டு நிறைந்த இரத்தத்துடனோ அல்லது திரவத்துடன் கூடிய முளைகள் சிவந்தோ கறுத்தோ காணப்பட்டன. மிகுந்த வேதனையும் நாற்றத்தால் நிணம்போன்ற சீதக் கழிவும் காணப்பட்டன. குதத்தின் உட்புறம் சிதைவுற்ற சீதப்படையே கசிவாக வெளியேறிக்கொண்டிருந்தது.

இரத்தம் வெளியேறிய முளைகள் மிக அற்பமான சிறு முளை போலும் சில பருக்கள் உடைந்த அடையாளம் போலும் புண்ணாக காணப்பட்டன. தொடுதலுக்கு வேதனை அதிகரிக்கும். குதவாசலால் சீதம் கசிந்துகொண்டிருக்கும். எரிச்சலும் அழற்சியுமுற்று நோயாளி துயருறுவான்.

சில நோயாளிகளில் வெளியில் முளைகள் ஏதும் காணப்படவில்லை. ஆனால் மலம் வெளியேறும்போது, இரத்தமும் சேர்ந்து வெளியேறத் தொடங்கி மலம் கழிந்த பின்பும் சுமாரான இரத்தம் வெளியேறி பின் குறைவடைந்துவிடுவதாய்க் கூறினர். இது மிக அருமையாய் பல காலத்துக்கு ஒரு தடவை இளமையிலிருந்து பின்பு அடிக்கடி உபத்திரவம் கொடுப்பதாயும் கூறினர் அதிகளவு இரத்தப் போக்கினால் பய உணர்வும் களைப்பும் ஏற்படுவதாகக் கூறினர்.

குதத்தின் உட்சுவரின் சீதப்படை ஸ்தாபிதமடைந்து அழிந்துவிடுவதால், மயிர்த்துளைக் குழாய்களின் கலச் சுவர்கள் சிதை





வுற்று குருதி வெளியேறிக் கசிந்துகொண்டு இருந்தது. குதத்தில் எரிச்சலும், அழர்ச்சியும் இருப்பதாக நோயாளி கூறுவார்.

## 5. குத நெகிழ்ச்சி [Prolapse of the Rectum]

உபத்திரவம் : குதம் கீழ்நோக்கி இறங்குதல் என்னும் இந்நிலை அநேகமாக ஓரளவு சிறுவயது முதல்பெரியவர்கள் வரை ஏற்படுவதைக் காணக்கூடியதாக இருந்தது.

வயிற்றுளைவு, சீதக் கழிச்சல் நோயினால் அடிக்கடி தாக்கமுற்றதாகவோ மலச்சிக்கல் காரணமாகவோ, முக்குவதாலும் குழந்தைப்பராயத்தில் மலச்சிக்கல் சீர்கேட்டினாலும், குழந்தை மூச்சடக்கி தொடர்ச்சியாகக் கத்தி அடம்பிடிக்கப் பழகிக்கொள்ள விடுவதாலும், சிறுவயதில் குதநெகிழ்ச்சி ஏற்படக்காரணமாகி பின் வழமையாகவே குந்தியிருந்து மலங்கழித்தாலோ, உரத்துக் கத்தி அழுதாலோ குதம் வெளியேறுவது குழந்தைகளில் வழமையாகிவிடுகிறது

வயிற்றுழைவு, சீதக் கழிச்சலில் மலம் கழிக்க வேண்டுமென்ற உணர்வு உந்துதலாலும் குடலை வலித்து முறுக்குவதாலும், முக்கி மலம் கழிக்க முயலும்போது, சிறிது மலமும், சீதமும் வெளியேறி பின்பு, குதமும் வெளியேறி விடுகிறது. இதுவும் பின்னர் மலம் கழிக்க முயற்சிக்கும் நேரமெல்லாம் குதமும் சேர்ந்து வெளியேறுவது வழமையாகிவிடுகிறது.

## 6 மூலக் கரப்பன் [Ano – rectal Pruritus]

உபத்திரவம் : இது அனேகமாக, பெரியவர்களுக்கே ஏற்படுகிறது. மூலத்தைச் சுற்றி மசமசத்த அரிப்பும், தடிப்பும் ஏற்பட்டிருப்பதாக உணர்கிறார்கள். ஆடையினால் உரசுவதாலோ சொறிவதாலோ அரிப்பு மேலும் அதிகரித்து உபத்திரவம் கொடுப்பதாகவும், அடிக்கடி சிறுநீர் கழிய வருவதுபோலும், சூடான நீரால் கழுவ அல்லது ஒத்தடமிட அரிப்புத் தணிந்துவிடுவதாயும் இரண்டொரு தினங்களில் மீண்டும் ஏற்பட்டு உபத்திரவப்படுவதாய் கூறினர்.

### பரிசோதனை

நாட்பட்ட நிலையில் ஆசனப்பகுதியைச் சுற்றி தடிப்பும், சிறு கூட்டமான பருக்களும், அதனால் நிணக்கசிவும், புண்ணாகவுமிருந்தது. இது ஆரம்பநிலையில் கவனிக்கும்போது தொடுத்தல். உணர்ச்சி குறைவாயும், சருமம் கறுத்தும் தடித்தும் காணப்பட்டது நாட்டப்பட்ட நிலையில் சருமம் கடிதகிருந்தபோதும். மேற்தோல் சிதைவுற்று, நுண்ணிய சிவந்த புள்ளிகள் நிறைந்து காணப்பட்டன. நிணம் பிசுபிசுப்பாய்க் கசிந்துகொண்டிருந்தது.

இந்நோயாளிகளில் மூலக் கரப்பன் ஆரம்பிக்கும் முன் பீனிசம், தொய்வு போன்ற ஏதேனும் ஒரு நோய்க்கு ஆட்பட்டிருந்ததாயும், மூலக் கரப்பன் ஆரம்பித்த பின்பு முன்னைய நோய்களால் பாதிக்கப்படவில்லை என்பதையும் அறியமுடிந்தது.

## 7. மூல வெடிப்புக்கள்: (Anal Fissure)

இதில் ஒரு வகை சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும் கடினமான நாட்பட்ட மலம் வெளியேறும்போது குதவாயில் வெடிப்பு ஏற்பட்டு பின் ஆறிவிடும். அடிக்கடி இந்நிலையேற்படும் சிலருக்கு குதத்தில் சீதச்சவ்வும் சிதைவடைந்து குதவாயிலில் வெடிப்பு தொடர்ந்து இருப்பதால் சிறு நீர் கழிக்கும்போது அல்லது மாதாந்த ருதுக்காலங்களில் பெண்களுக்கும் மிக வேதனையைக்கொடுப்பதாயிருக்கும்

வேறு சிலரில் பனிமிகுந்த குளிர்காலங்களில் மட்டும் வாய் ஓரங்களிலும் முலைக்காம்புகளிலும், குதத்தின் வெளிப்புறத்திலும் வெடிப்புக்கள் தோன்றுவதாயும் இது வேதனை கொடுப்பதால் மலம் கழியும்போது சிரமத்தையும், வெடிப்புகள் நோதல் ஏற்படும்போது இரத்தம் பொசிவதாயும் இருக்கும்.

இவ்விரு நிலைகளிலும் முன்னையமலச்சிக்கல் வெடிப்புக்கும் பின்னையதற்கும் வெகு வித்தியாசம் காணப்படுகின்றன. முன்னையதில் குதத்தினுட்புறம் சிதைக்கப்பட்டு ஓரங்களில் வெடிப்புக்கள்





ஏற்படும். ஆனால் விரைவில் சீதப்படையும், வெடிப்புகளும் ஆறிவிடக்கூடியதாயும் மலச்சிக்கல் இல்லாயாயின் மீண்டும் அவ்வெடிப்புக்கள் ஏற்படாது குணமாகியும் விடுகிறது.

பின்னைய மூல வெடிப்பில் மூலத்தின் உட்புறச்சீதப்படை சிதைவடையாது இருப்பிலும் ஓரங்களில் சிறிதுவீக்கமும், ஆழமான வெடிப்புகளும் வெடிப்பின் இடைப்பகுதி கடினமான தோலாயும் காண முடிந்தது. எண்ணெய்ப் பொருட்களைப் பூசுவதால் வேதனையைக் குறைத்துக்கொள்ள முடிந்ததாகக் கூறுவர். ஆனால் இவை மீண்டும் மீண்டும் வருத்துவதாக இருக்கும்.

## 8. கிருமி மூலரோகம் (Worm Piles)

பெருங் குடலில் வாழும் நூனப் பூச்சிகள் (Thread worms) இரவு நேரங்களில் குதப்பகுதியை அடைந்து உபாதை செய்வதாலும், மலச்சிக்கல் காரணமாக இக்கிருமி உண்டாவதாலும் அரிப்பைக் கொடுப்பதாய் அறியலாம். இதில் மூலத்தின் வெளிப்புறம் தடித்து வீக்கமும் தாபிதமும் ஏற்பட்டு சிலவேளை புண்ணாகவும் காணப்படுகிறது. குதத்தின் உட்புறத்தில் அழர்ச்சியும், சீதப்படை சிதைவுற்றும் கசிவதாயும் வீக்கமும் சிலவேளை காணப்படும்

## 9. மூலப் பகந்தரம் (Fistula - In - Ano)

மலவாசலைச் சுற்றி நமைச்சலும், இடுப்பின் வேதனையும் ஏற்பட்டு, மூலத்தில் அழர்ச்சியும், காய்ச்சலும் ஏற்பட்டு, கடினமான வீக்கமும் தீவிரமடைந்து நடக்க, மலம்கழிக்க முடியாதுபோய், சில தினங்களுள் கட்டி உடைந்து குணமாகிவிட்டதாயும் பின் மீண்டும் ஏற்பட்டதென்றும் கூறுவர் சிலருக்கு சத்திர சிகிச்சையின் பின்பும் அவ்விடத்தால் துர்நாற்றமான நீர் ஆடைகளில் படிந்துகொண்டிருப்பதாயும் கூறுவர்.

### பரிசோதனை:

ஆரம்ப அல்லது முதல் முறைத் தாக்கத்தில் திரட்சி கடினமாயும், சூடாயும் காணப்படும். வீக்கத்தில் தொடுதல் பொறுக்கமுடியாததாய் இருக்கும். முளை கட்டிவிட்டால் முனைப்பகுதி சற்றுத்

துணிவான சூடாகக் காணப்படும். திரட்சி உடைந்தநிலையிலாயின் வெடிப்புப் போன்று ஆழமாயும், சிவப்பு நிறமான திணம் நுரை போன்று கழிவாக வெளியேவந்துகொண்டிருப்பதைக் காணக் கூடியதாய் இருக்கும். நாட்பட்ட நிலையாயின் குதவாயை அடைத்துக்கொண்டு சிறிது முக்கக்கூடினால் விரணத்தின் வெடிப்பால் சீதமும் திணமும் நுரையாக வெளிவரக் காணக்கூடியதாயிருந்தது. இந்நிலை மிக ஆபத்தாகும். இவற்றில் ஏற்படும் அழுகல்தன்மை குதத்தின் மேல் நேர்குடல் பகுதியிலும், சிறுநீர்ப்பையிலோ யோனிப் பகுதியிலோ ஊடறுத்துச் சென்று பரவி ஆபத்தை விளைவைக்கும்.

## மூலநோய் ஏன் வருத்துகிறது?

1. ஆரம்பகால நிலைமைகள் நோயாளியைக் கவலையடையச் செய்வதில்லை.
2. மெதுவாகத் தொல்லை கொடுக்க ஆரம்பித்தபோதும் அது சகிக்கக்கூடியதாய் இருத்தல்.
3. இப்பகுதியில் ஏற்படும் தாக்கமானது வெட்க உணர்வை அடையச் செய்தல்.
4. சத்திரசிகிச்சை செய்யவேண்டும் என்ற விளக்கமற்ற பய உணர்வினாலும்
5. இந்நோயால் வரக்கூடிய விளைவுகளையும், ஆபத்தையும் விளங்கிக்கொள்ளாது அசட்டையாயிருத்தல்.
6. வெட்க உணர்வினால் தமக்கு நெருங்கிய நண்பரை அல்லது மருந்து விற்பனையாளரை அணுகி ஆலோசனை பெறுதல், அல்லது பத்திரிகை சஞ்சிகைகளில் காணும் விளம்பரங்களைப் பார்த்துவிட்டு அதில் வரும் மருந்துகளை தாமே உபயோகித்து, தற்காலிக நிவாரணம் தேடுவது
7. மூலநோய் எதிர்ப்பு மருந்துகள் அனைத்திலும் மருந்துத் தயாரிப்பாளர்கள், வைத்தியர்கள் கையாள்வதற்காகவும், மற்றும் விற்பனை ரீதியிலும் நோய்க்கான முக்கிய அறிகுறி





களையும் தகவற் குறிப்பாக அதில் வெளியிட்டிருப்பதால் மருந்து விற்பனையாளரும் நோயாளியும் தாமே நோயை நிதானித்து சிகிச்சைசெய்ய முனைவதாலும் சிலவேளைகளில் நோயைப் பரிணாம வளர்ச்சிக்கு இட்டுச்சென்று வருந்துவதற்கும் ஆபத்திற்கும் வழிவகுத்து விடுகின்றனர்.

### மூல நோயாளி ஆயுர்வேத மருத்துவரை எப்போது அணுகுகிறார்?

1. வழக்கத்தை விட அதிக வேதனையால் துன்பப்படும்போதும்,
2. அதிக அளவு குருதி வெளியேறியது கண்டு பயந்த நிலையிலும்,
3. மூலம் கீழே இறங்கி வெளியே தெரிவதைக் காணும்போதும்
4. சத்திர சிகிச்சையின் பின் மீண்டும் நோயால் வருந்தும் போதும், எமது வைத்திய முறைகளில் சிகிச்சை பெறுவதற்கு முனைப்பாக வருகிறார்கள்.

### இந்நிலையில் மருத்துவர் செய்வது என்ன?

1. வேதனையை உடன் தணிவடையச் செய்வது
2. குருதிப் பெருக்கைத் தடைசெய்வது
3. கீழிறங்கிய நிலையிலுள்ள குதத்தை உட்செலுத்துவது.
4. மலச்சிக்கலை அகற்றுவது.
5. மீண்டும் அந்நோய் ஏற்படாது நோயாளியினதும், நோயினதும் தன்மைபற்றி ஆராய்ந்து சிகிச்சைக்கு முடிவு செய்வது.

### மீண்டும் நோய்த்தாக்கம் ஏற்படாது தடுப்பதற்கு யாது செய்ய முடியும்?

1. நோயாளியின் முன்னைய நோய்கள், தற்போதைய நிலைமைகளையும் ஆராய்ந்து உணவு மற்றும் பழக்க வழக்கங்களைச்

சீர்திருத்தி நடைமுறைக்கு ஒவ்வாதவற்றை நீக்கி, ஏற்ற முறைகளை அனுசரிக்கும்படியும் அறிவுறுத்தல் வேண்டும்.

(நோய் வராமலும், நோய் வந்தபின்பும் செய்யவேண்டிய நடைமுறை ஒழுங்குகள் முன்பு விபரிக்கப்பட்டுள்ளன (பக்கம் 9, 10)

2 கோளாறடைந்த தோஷங்களின் தன்மை, உடல்வலிமை நோயின் தாக்கம் இவற்றை ஆராய்ந்து மீண்டும் உபத்திரவம் ஏற்படாத சமன சிகிச்சையும் அழுகல் நிலை ஊடுருவலைத் தடுக்கும் சோதன சிகிச்சையையும் கவனிக்கவேண்டும்

இந்த வகையில், குதத்தின் உட்புறம் மலவாசலூடாக உபயோகிக்கும் மருந்தினையும், நோயாளி உள்மருந்தை விரும்பி உபயோகிக்கும் நிலைமையையும் கருத்திற்கொண்டு, என்னால் ஆய்வு செய்து தயாரிக்கப்பட்ட மருந்துவகைகள் பின்வருமாறு:

1. Rectalin piles Ointment
2. Rectalin Tablets (mild)
3. Rectalin Capsules (Forte)
4. Rectalin Syrup
5. Herbolax Tablets For laxative (mild & Forte)

மேற்படி மருந்துகள் யாவும், மூலிகைகள், தாதுலோகங்கள், நெய், எண்ணெய் போன்ற இயற்கைப் பொருட்களின் கூட்டுச் சேர்க்கையாய் தயாரித்து, உபயோகித்து நல்ல பலன்களையும், முடிவுகளையும் காணக்கூடியதாய் இருந்தது.

## இவ்வகை மருந்துகளைத் தயாரித்துச் சிகிச்சை செய்வதில் ஏற்பட்ட பலன்கள் யாவை?

1. மருந்துகளைக் கையாள்வதும், நோயாளி உபயோகிப்பதற்கும் இலகுவாக இருந்தது.
2. மருந்து குறிப்பிட்ட காலத்துள் கெட்டுவிடாது பாதுகாத்துக் கொள்ள வாய்ப்பளித்தது.





3. தயாரிப்பின் தரத்திற்குக் கேடு நேராமல், மருந்தை வடிவமைப்பதில் விஞ்ஞான யுகத்திற்கு ஏற்ற வகையில் கவர்ச்சிகரமாய் அமைந்தது.

## இவ்வாறான மருந்துகளின் சிறப்பியல்புகள் யாது?

1. குதத்தின் (உட்சுவர்) சீதப்படையின் அழர்ச்சியை உடன் தணிவடையச் செய்கிறது.
2. குதப்பகுதியில் உள்ள மயிர்த்துளைக் குழாய்களில் இரத்தம் பெருகுவதைத் தடுக்கிறது.
3. ஊனம் வடிவதைக் குறைத்துக் குணமாக்குகின்றது.
4. குதப்பகுதியின் வீக்கமடைந்த இழையங்களில் உள்ள தேக்கத்தைக் குறைக்கின்றது.
5. குத விளிம்பின் கடின உணர்ச்சி வேதனை, அரிப்பு, தடிப்பு, இவற்றைப் போக்கிவிடுகிறது.
6. மருந்தின் கிருமி எதிர்ப்புச் சக்தியினால் நோய் பரவும் வேகத்தைக் கட்டுப்படுத்தி, தொற்றை அழித்துவிடுகின்றது.
7. ஜீரண சக்தியையும், மலச்சிக்கலையும் வழமைப்படுத்தி, உடலுக்கு ஊட்டத்தையும், தோஷங்களைச் சமப்படுத்தி மீண்டும் நோய்த்தாக்கம் ஏற்படாமல் செய்கிறது.

## அறிவுரை

மலச்சிக்கல் 60 வீதத்தினருக்கு ஏதோவொரு வகையில் தொல்லை கொடுக்கும் மூலநோயாகின்றது. ஏனையோர்க்கு மூலத்தில் உபத்திரவம் கொடுக்காவிட்டாலும், பெருங்குடல் பகுதியில் தேங்கும் மலத்தினின்றும் மீண்டும் உறிஞ்சப்பட்ட துர்நீரானது குருதிச் சுற்றோட்டத்தில் கலந்து உடல் முழுவதும் பாவும்போது தீராத தொடர்ந்த தலைவலி, அல்லது அதிகரித்த நித்திரை, ஞாபகசக்திக் குறைவு, பீனிசம் என்னும் நீர்வடியும் தொடர்தும்மல், பலதரப்பட்ட சர்மரோகங்கள், தொய்வு, போன்ற ஒவ்வாமை நிலைகளையும்,

உயர் இரத்தஅழுத்தம், இருதய ரோகங்கள், முட்டுவாத ரோகங்கள் சிறுநீரக ரோகங்கள் போன்ற பல நோய்களுக்கும் அடிப்படைக் காரணமாக இருப்பதை அறியலாம்.

ஆயுர்வேத வைத்திய முறைகளில் குறிப்பிட்ட நோய்க்கான மருந்துகளை உபயோகிப்பதுடன், இலகுமலகாரியாகவும், சிறுநீர்ப் பெருக்கியாயும் உள்ள மருந்துகளையும் சேர்த்துக் கொடுத்து அடிப்படைக் காரணத்தையும், குருதியில் உள்ள ஒவ்வாமையையும் நீக்கிவியாதியைக் குணப்படுத்தவேண்டும்.

இரத்த விருத்தியையும், ஏனைய ஊட்டச் சத்துக்களை நிறைவுசெய்யும் மருந்துகளைச் சில மாதங்கள் நடைமுறையாய்க் கொடுக்கவேண்டும்.

ஒவ்வாமை என்னும் நிலைக்குத் துரிதமடைந்த ஓமோன்களையும் (அகச் சுரப்பிகள்) தோஷங்களையும் சமப்படுத்தும் செயல்களாக நடைமுறையில் தைலப் பிரயோகமும் (தினமும் தலைக்கு எண்ணெய் வைத்தல்) அப்யங்கன ஸ்னானமும் (வாரமொருமுறை தேகம் முழுவதும் எண்ணெய் தேய்த்து முழுகுதல்) வியாயாமம் என்னும் தினசரி உடற்பயிற்சியையும், தானியங்கள், பருப்பு வகைகள், மரக்கறிகள், இலைவகைகள், கீரை வகை, முட்டை, பால், கஞ்சி, நெய், மோர், சூப், பழவகைகள் போன்ற போஷாக்குள்ள உணவுத் திட்டத்தைச் சேர்த்தும் விலத்தியும் (பத்தியம்) சிகிச்சை பெறும் காலத்திலும் சரி, நோய் நீங்கிய பின்பும் சரி ஆரோக்கியமான பழக்க வழக்கங்களை அனுசரிக்கும்படி வலியுறுத்திப் போதிப்பதால் மக்கள் நோயற்று, ஆரோக்கியமாக வாழ வழிசெய்வதாகுமென்று ஆயுள்வேதம் உபதேசிக்கின்றது

## நிறைவுரை

மனித நாகரிகத்திலும், விஞ்ஞானத்திலும், மருத்துவ விஞ்ஞானம் மிகத்தொன்மையானது. புராதன காலத்து மனிதன, தன் திறமையை வளர்த்துக்கொள்ள இறைவன் துணை நிற்பதாய் மிக நம்பினான். அதனால், விசுவாசமும், ஒழுக்கமும் உள்ளவனாய்





தன்னை முதலில் புரியமுற்பட்டான். பின் உலகை ஆராய்ந்தான் அதன் பின்பே வாழ்விற்கு அவசியமான ஒவ்வோர் துறையிலும் தன் புலமையை வளர்த்துக்கொண்டு, மெய்ஞ்ஞானம் மிக்க விஞ்ஞானிகளாய்த் திகழ்ந்தனர் எனலாம். இயந்திர சாதனங்களோ, தொழில்நுட்ப உதவிகளோ அற்ற பண்டைய மெய்ஞ்ஞானிகளின் ஆய்வுகளும், முடிவுகளும் வியக்கத்தக்கதாகும். உள்ளத்தையும், உடலையும் இணைத்து, இயற்கையோடிணைந்த நோயற்ற வாழ்வின் ஆரோக்கிய நெறிமுறைகளையும், இயற்கை மருத்துவ உபயோகத்தையும் இன்றைய நவீன விஞ்ஞானிகளும் ஏற்றுக்கொள்கின்றனர். மெய்ஞ்ஞான உணர்வற்ற விஞ்ஞானம் அழகான குருடரையும், விஞ்ஞான விளக்கமற்ற மெஞ்ஞானம், அழகான முடவரையும் இன்று எம்மிடையே உள்ளது.

ஆயுள்வேத மருத்துவ விஞ்ஞானம் இந்திய நாட்டில் பாரியளவு நவீன வளர்ச்சியடைந்து இன்று உலக மருத்துவவிஞ்ஞானிகளின் கருத்தையும், கவனத்தையும் கவர்ந்துள்ளதை அங்கு காணலாம்.

அந்த வகையில், நம்நாட்டிலும், பாரம்பரிய மருத்துவத் துறையைச் சார்ந்தவர்கள் வாதப் பிரதிவாதங்களை விடுத்து உன்னதமான தத்தமது பாரம்பரிய மருத்துவ முறைகளை அடிப்படை இயற்கை இயல்புகளும் குணாம்சங்களும் மாறாது, காலத்திற்கும் எதிர்பார்ப்பிற்கும், பழக்கத்திற்கும் ஏற்ற உண்மையான பரந்த மனப்பான்மையுடன் அணுகி முயலவேண்டுமென்பதில் பெருவிருப்பும், அதனால் மங்கிப்போகும் எம்பாரம்பரிய மருத்துவம் நவீனமயமாகப் பிரகாசிக்கும் என்பதில் பெருநம்பிக்கையும் கொண்டுள்ளேன்.

''மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமையில்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கம் செய்திடல் வேண்டும்''

என்ற பாரதியின் கனவு நனவாக வேண்டிப் பிரார்த்தித்து நிறை வெய்துகிறேன்.

# நன்றியுரை

என் நூலாக்கத்திற்கான அடிப்படை ஒழுங்குகளை நெறிப்படுத்தி உதவிய மதிப்புக்குரிய பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கட்கும்,

வைத்தியக்கல்லூரி நாள் முதல் இன்றுவரை என் ஆய்வுகட்கும் தேவைகட்கும் அவ்வப்போது நூல்களையும், விளக்கங்களையும் தெளிவுபடுத்திப் பேரார்வம் ஊட்டிவரும் மதிப்பிற்குரிய என் குருநாதர் வைத்தியகலாநிதி அ. வி. இராசரத்தினம் அவர்கட்கும், எமது வைத்திய நவீனத் தயாரிப்புக்களுக்கு பேராதரவும், ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருவதுடன், கஷ்டமான சூழ்நிலைகளில், எம் முயற்சிகளும் சேவைகளும் ஸ்தம்பிக்காவண்ணம் தன்னாலன உதவிகளை நல்கித், தொடர்ந்து எம் அக்கங்களை இனிதே நடைபெற உதவி வரும் மனிதநேயச் சமூகத்தொண்டராக வாழும் வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் அவர்கட்கும்,

பழைய மாணவியான என்னை இன்றும் தன் மாணவிபோல் அரவணைத்து எனக்கு வேண்டிய பொழுதெல்லாம் தேவையான வைத்திய நூல்களையும் பேராதரவையும் நல்கிவரும் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் அதிபர் வைத்தியகலாநிதி N. வாமதேவன் அவர்கட்கும், பதிவாளர் திருமதி க. பரமசிவம் அவர்கட்கும், என் மனமார்ந்த பணிவான நன்றிகளைக் கூறிக் கொள்கிறேன்.

மேலும் இந்நூலின் அச்சுப் பிரதிகளைத் திருத்தியும் நல ஆலோசனைகளையும் உதவியையும் சலியாது மனமுவந்து செய்த நண்பர் Dr. தி. பரமசிவம் அவர்கட்கும், தட்டச்சுப் பதித்துதவிய திருமதி G. சதானந்தனுக்கும், நூலின் முகப்போவியத்தை அழகுற அமைத்த பிரம்மஸ்ரீ S ஜெகநாதசர்மா அவர்கட்கும், விளக்கப் படத்தை வரைந்துதவிய செல்வி I. வாசுகிக்கும் நூல் அட்டையை அழகுற வடிவமைத்த ஞானம்ஸ் ஆட்ஸ் அவர்களுக்கும், விரைந்து





புளொக்குகளைத் தயாரித்து உதவிய 'ஈழநாதம் அழகன் புளொக் ஸ்தாபனத்தாருக்கும்' மிக ஆர்வத்துடன் நூலை அழகுற அச்சேற்றிக் கட்டமைப்புச் செய்த முல்லை அச்சகத்தாருக்கும், பலவழிகளிலும் இந்நூலை அச்சேற்ற அங்கங்கும் ஒழுங்குகளைச் செய்து தன் முயற்சியாய் அலைந்து உதவிய எமது வைத்திய அபிமானியும், ஆதரவாளருமான பெயர் குறிப்பிட விரும்பாத நண்பருக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றியையும் கூறுவதில் மகிழ்வடைகிறேன்.

இவ்வண்ணம்

இ. மங்களாம்பிகை அம்மாள்

□ □ □

## உசாத்துணை நூல்கள்

1. மாதவ நிதானம் எனும் ரோகவிநிச்சயம்
(வைத்தியரத்தினம் மே. துரைசாமி ஐயங்கார்)
2. சாரங்கதர சம்ஹிதை
(வைத்தியரத்தினம் மே. துரைசாமி ஐயங்கார்)
3. அஷ்டாங்கஹ்ருதயம்
(வைத்தியரத்தினம் மே. துரைசாமி ஐயங்கார்)
4. அக்னிவேசரின் சரஹ சம்ஹிதை (2ம் பகுதி)
(எஸ். என். ஸ்ரீ ராமதேசிகன்)
5 The Ayurvedic system of Medicine
(Kaviraj Nagendranath Sengupta)
6. சரபேந்திர வைத்திய முறைகள்
(தஞ்சை சரஸ்வதி மஹால் வெளியீடு)

7. சரபேந்திர வைத்தீய ரத்தினாவளி
(தஞ்சை சரஸ்வதி மஹால் வெளியீடு)
8. ஸ்ரீ வல்லபேந்திர வைத்திய சிந்தாமணி
(தஞ்சை சரஸ்வதி மஹால் வெளியீடு)
9. யூகிமுனிவர் வைத்திய சிந்தாமணி (பெருநூல் 800)
(தண்டபாணி கோவில் சித்தமருத்துவ நூல் வெளியீடு)
10. திருமந்திரம் (கழகவெளியீடு)
11. அனுபோக வைத்திய நவநீதம் (9-ம் பாகம்)
(தண்டபாணி கோவில் சித்தமருத்துவ நூல் வெளியீடு)
12. ஸ்ரீபதஞ்சலி யோகசூத்திரம் - (சுவாமி)
13. ஆனந்தயோகம் (யோகிராஜா)
14. போக முனிவர் சப்த காண்டம்
(ஆயுர்வேத பாஸ்கர கந்தசாமி முதலியார்)
15. ஆத்ம ரட்ஷாமிருதம் எனும் வைத்திய சாரங்கிரகம்
(ஆயுர்வேத பாஸ்கர கந்தசாமி முதலியார்)
16. தேரையர் வைத்தியர் காவியம் - 1500 (தாமரை வெளியீடு)
17. வைத்திய யோக ரத்னாவளி (இம்காப்ஸ்)
18. சகஸ்ர ஸித்த யோகம் 1-2 பாகம் (எஸ். கிருஷ்ணராவ்)
19. கவிராஜசேகரம் (எஸ். கிருஷ்ணராவ்)
20. சிகிச்சா ரத்ன தீபம்
(வைத்தியரத்தினம் சி கண்ணுச்சாமிப்பிள்ளை)
21. வைத்திய சிந்தாமணி - 2ம் பாகம்
(வைத்தியரத்தினம் சி. கண்ணுச்சாமிப்பிள்ளை)
22. பதார்த்தகுண விளக்கம்
(வைத்தியரத்தினம் சி. கண்ணுச்சாமிப்பிள்ளை)
23. பரராசசேகரம் - 7ம் பாகம் (ஐ. பொன்னையா - யாழ் நூல்)
24. வைத்தியக் கைமுறைகள் (சு. சிற்றம்பலம் - யாழ். நூல்)
25. ஏட்டுச் சுவடிகளும், அனுபவக் கையெழுத்துப் பிரதிகளும்
(எமது பரம்பரை வழிவந்தவை)

# நூலாசிரியர்



"வட இலங்கை ஆயுள்வேதக் கல்லூரியின் பட்டதாரியாகிய செல்வி மங்களாம்பிகை அம்மாள் ராஜரத்தின ஐயர், இன்று யாழ்ப்பாணத்தின் முன்னணி ஆயுள்வேத வைத்தியர்களில் ஒருவராகத் திகழ்கின்றார்.

ஆயுள்வேத முறையினை நவீன அறிவியல் அணுகுமுறைகளுக்கேற்ப நோக்கிச் செயல்படுவதனால் இவரது வைத்திய முறைமை, வெறுமனே மரபுத் தொடர்ச்சியாக அமையாது, இவ்வைத்திய முறைமையின் முழு ஆற்றலையும் வெளிக்கொணரும் வகையில் அமைந்துள்ளது.

ஆயுள்வேத, சித்த மரபுகள் பற்றிய ஆழ்ந்த மூலநூலறிவு, இந்தியாவின் முன்னணி ஆயுள்வேத நிறுவனங்களுடனுள்ள பரிச்சயம், தொடர்பு, மேனாட்டு வைத்தியத்துறை விற்பன்னர்களோடான அறிவியல் ஆராய்ச்சித் தொடர்பு ஆகியன காரணமாக இவரது வைத்திய முறைமை, ஆயுள்வேதப் பயில்வில், நம்மிடையே ஒரு நிச்சயமான விஸ்தரிப்பை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

ஆயுள்வேத முறைமையில் வரும் மருந்துகளை நவீன சூழல்களில் இடர்ப்பாடின்றிப் பயன்படுத்துவதற்கேற்ற வகையில், இந்திய ஆயுள்வேத நிறுவனங்கள் சில தயாரிப்பது போன்று இவரும் தயாரித்துப் பெரு வெற்றி கண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தின் இன்றைய சூழலில் இவரது மருத்துவ சேவை பெரிதும் போற்றப்படுகின்றதொன்றாகும்.

குருபக்தியும், அறிவைப் பகிர்ந்துகொள்ளும் அகண்ட பார்வையுங் கொண்ட இவர் இனிய சுபாவமும், உதவும் பண்பும் நிறைந்தவர். தமது தம்பியார் வைத்திய கலாநிதி லக்ஷ்மண ஐயருடன் இணைந்து தமது வைத்தியப் பணியைச் செய்துவருகின்றார்.

இவர் திறன்களும் பணிகளும் மேலும் மேலும் சிறப்பதாக"

கார்த்திகேசு சிவத்தம்பி
தமிழ்ப் பேராசிரியர்,
தலைவர் நுண்கலைத்துறை.
யாழ் / பல்கலைக்கழகம்

29-07-94